பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 09 செவ்வாய்க்கிழமை 25.08.2020 கதிர் 289

## இது ரகசியம் அல்ல!

தமிழர் அரசியலில் இப்போது அதிகம் பேசப்படும் விவகாரம் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளர் மற்றும் கொறடா நியமனம்தான்.

கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் மேற்படி இரு பதவிகளையும் பக்கம்02 »

# தமிழ் மக்கள் ஓரணியில் திரண்டு தமிழ்க் கூட்டமைப்பை வீழ்த்துவர்

## இப்படி நம்புகின்றது ராஜபக்ஷ அரசு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிப்பதற்காக எதிர்காலத்தில் வடக்கு, கிழக்கில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களும் ஓரணியில் திரள்வார்கள்.

– இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வீ.விக்னேஸ்வரனின் நாடாளுமன்ற உரை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

அடிப்படைவாதக் கட்சிகள் மற்றும் தலைவர்களால் முன்வைக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில் நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. அவையெல்லாம் அரசியலை மையப் பக்கம் 02 »

# போதைப்பொருள் கிடைக்காததால் சிறைக்குள் 3 கைதிகள் தற்கொலை

அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் காரணமாக சிறைச் சாலைகளுக்கு போதைப்பொருள் கிடைப்பது தடுக்கப்பட்டுள்ள காரணத்தினால் கடந்த வாரத்தில் மூன்று கைதிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் எனச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகளுக்கு போதைப்பொருள் வருவது தடுக்கப்பட்டுள்ள காரணத்தினால் சிறைக் கைதிகள் சிலர் மந்தமாக இருந்தனர் எனவும் கடந்த வாரத்தில் அவர்களுள் மூவர் தற்கொலைசெய்துகொண்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். பக்கம் 02 »

# நாடு தழுவிய திடீர் மின்சாரத் தடை: அமைச்சரிடம் அறிக்கை கையளிப்பு

கொழும்பு, ஓக.25

இம்மாதம் 17ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட திடீர் மின்சாரத் தடை தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை, மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை ஆய்வு செய்து நாளை புதன்கிழமை கூடவுள்ள அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பான அறிக்கை, மேற்படி குழுவினால் நேற்றுப் பிற்பகல் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. பக்கம் 02 »

# சஜித் அணியுடன் ஐ.தே.க. சங்கமம்!

## ஆட்டத்தை ஆரம்பித்தார் கரு

கொழும்பு, ஓகஸ்ட் 25

**சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து அரசியல் கூட்டணியை அமைப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி கவனம் செலுத்தியுள்ளது என அறியமுடிகின்றது.**

**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை கரு ஜயசூரியவிடம் ஒப்படைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க பச்சைக்கொடி காட்டியதையடுத்தே கரு ஜயசூரியவால் நேற்று விசேட அறிக்கையொன்று விடுக்கப்பட்டது.** பக்கம் 02 »

# தமிழர்கள் இனியும் ஏமாறத் தயாரில்லை

## கூட்டமைப்பு எம்.பி. கலையரசன் தெரிவிப்பு



அம்பாறை, ஓக.25

கடந்த காலத்தில் இருந்த சிங்கள அரசியல் தலைவர்களால் நாம் ஏமாற்றப்பட்டோம். ஆனால், இனியும் ஏமாற நாம் தயாரில்லை. தமிழர்கள் வரித்துக்கொண்ட கொள்கையில் உறுதியாக இருக்கின்றார்கள் என்பதை சிங்கள அரசியல் தலைவர்களுக்கு நாம் புரிய வைக்க வேண்டும். பக்கம் 02 »

# 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்கள் தயார்!

## மீதமுள்ள 10,000 பேருக்கு விரைவில்

கொழும்பு, ஓக. 25

அரச சேவைக்குள் இணைக்கப்படும் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்களை வழங்க அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. செப்ரெம்பர் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அவர்கள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களில் தமது கடமையைப் பொறுப்பேற்க முடியும் என்று அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

ஜனாதிபதி பக்கம் 02 »

# கருவை இயக்கும் ரங்கள!

## பொதுச்செயலாளர் பதவியில் குறிவைப்பு

கொழும்பு, ஓக. 25

ஐக்கிய தேசியக் கட்சியின் இடைக்காலத் தலைவராக கரு ஜயசூரிய நியமிக்கப்படும் பட்சத்தில் அக்கட்சி பக்கம் 02 »

# இளைஞர் மீது கொடூர தாக்குதல்; அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்ப்பு

முல்லைத்தீவு, ஓக. 25

முல்லைத்தீவு மாவட்டம், ஒட்டுசுட்டான் – பளம்பாசி பகுதியில், இளைஞன் ஒருவர் கடும் தாக்குதலுக்கு இலக்கான நிலையில், வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பளம்பாசி – வெள்ளைப்பிள்ளையார் கோயிலடியில் நண்பர்களுக்கிடையிலான வாய்த்தர்க்கம், கைகலப்பாக மாறியதிலேயே, இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கானவர் 25 வயதுடைய மயூரன் என்பவர் ஆவார்.

சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கையில் இவ்வருடம்

# இடைக்காலக் கணக்கறிக்கை தயார் பாதுகாப்புக்கும் கூடுதல் நிதி ஒதுக்கீடு

நாடாளுமன்றத்தில் இந்த வாரம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள இடைக்கால கணக்கறிக்கையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சித் துறை அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக 1.7 டிரில்லியன் (ஒரு லட்சத்து எழுபதாயிரம் கோடி) ரூபாவுக்கான அரசாங்கத்தின் இடைக்கால கணக்கறிக்கையில் 200 பில்லியன் (20 ஆயிரம் கோடி) ரூபா மேற்குறிப்பிட்ட அமைச்சுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு பொதுத் துறை செலவினங்களுக்காக 18 ஆயிரம் கோடி ரூபாவும் ஓய்வூதியத் துறைக்கு 8 ஆயிரத்து 300 கோடி ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்த இடைக்கால கணக்கறிக்கையில் இரண்டாவது அதிகபட்ச ஒதுக்கீடு பாதுகாப்பு அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக 17 ஆயிரத்து ஐந்நூறு பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையே சுமந்திரன் மற்றும் சிறிதரனிடம் இருந்து பிடுங்கித் தமக்குத் தர இணங்கி விட்டார்கள் என்ற சந்தோத்தில் ரெலோ, புளொட் தலைவர்கள் இருந்தாலும், அப்படி நடப்பதற்கு வாய்ப்பு இல்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இடைக்காலக் கணக்கறிக்கையை ஆராய்ந்து அங்கீகரிப்பதற்காக நாளை மறுதினமும் அடுத்த நாளும் நாடாளுமன்றம் கூடுகின்றது.

அச்சமயத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடி, நாடாளுமன்றக் குழுத் தலைவர், பேச்சாளர், கொறடா நியமனங்களைச் செய்யும் என்று எல்லோரும் எதிர்பார்க்கின்றார்கள்.

ஆனால், அந்தத் தெரிவு இந்த வியாழன், வெள்ளிக்கிழமையில் நடக்கவே மாட்டாது என்று இப்போது உறுதியாகத் தெரியவந்துள்ளது.

இந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்கு சம்பந்தன் சமுகம் தரமாட்டார் எனத் தெரிகின்றது.

சுமந்திரனுக்கும் யாழ்ப்பாணத்தில் நீதிமன்றங்களில் பல வழக்குகள் இருப்பதால் அவரும் இந்த வாரம் நாடாளுமன்ற அமர்வில் பங்கு பற்றமாட்டார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவர்கள் இருவரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் பங்குபற்றாத சமயத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடுவதோ அல்லது மேற்படி தெரிவுகளை அத்தினங்களில் நடத்துவதோ சாத்தியமற்றது.

அதனால், கூட்டமைப்பு நாடாளுமன்றக்குழு இனிக் கூடுவது பெரும்பாலும் அடுத்த மாதத்தில் அடுத்த கூட்டத் தொடரின் போதாகத்தான் இருக்கும். அதுவரையில் இதே நாடாளுமன்றக் குழுத் தலைவர் (சம்பந்தன்), பேச்சாளர் (சுமந்திரன்), கொறடா (சிறிதரன்) தத்தமது பதவிகளில் தொடர்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த மாதம் இந்தக் கூட்டம் நடைபெற்றாலும், இப்பதவிகளை தமிழரசுக் கட்சி தனது பங்காளிக் கட்சிகளான ரெலோவுக்கோ, புளொட்டுக்கோ விட்டுக் கொடுக்காது என்று உள்வீட்டுத் தகவல்கள் உறுதியாகக் கூறுகின்றன.

சுழற்சி முறையில் இந்தப் பதவிகளை மாற்றியேயாக வேண்டுமானால் – தமிழரசு விட்டுக் கொடுத்தேயாகவேண்டுமானால் – கடந்த நாடாளுமன்றத்தின் போது ஒரேயொரு தடவை கிடைத்த குழுக்களின் பிரதித் தலைவர் என்ற பதவியையும் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் சுழற்சி முறையில் மற்றைய தரப்புகளுக்கு விட்டுக் கொடுத்திருக்க வேண்டுமே எனத் தமிழரசு வட்டாரம் ஒன்று சுட்டிக்காட்டுகின்றது.

இதற்கிடையில் –

தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு சனியன்று வவுனியாவில் கூடுகின்றது. அதற்கு முன்னர் நாடாளுமன்றக் குழுப் பேச்சாளர், கொறடா தெரிவுக்கான வாய்ப்பு இப்போது தடைப்பட்டுப் போய்விட்டதால் இந்த விடயம் சனியன்று நிச்சயம் மத்திய குழுக் கூட்டத்தில் ஆராயப்படும். அங்கு தமிழரசு மத்திய குழு வலிமையான ஒரு தீர்மானத்தை எடுக்கக் கூடிய சாத்தியங் கள் தென்படுகின்றன.

இந்தப் பதவிகளுக்கு உரிமை கோரும் – கண் வைத்திருக்கும் – பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட்டுக்கு நல்ல இறுக்கமான பதில் தரும் தீர்மானமாக அது அமையக் கூடும்.

இதற்கிடையில் –

கடந்த வெள்ளியன்று மாலை இந்தியத் தூதுவரைச் சந்தித்த போது சுமந்திரனுடன் உரையாடிய கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று மதியம்தான் மீண்டும் சுமந்திரனுடன் தொலைபேசி அழைப்பு எடுத்துப் பேசினார்.

மேற்படி பேச்சாளர், கொறடா பதவிகள் தொடர்பில் தமிழ், ஆங்கில ஊடகங்களில் – அதுவும் ஞாயிறு வார இதழ்கள் மற்றும் திங்கள் பத்திரிகைகளில் – வந்த செய்திகளைப் பார்த்துவிட்டு, அது குறித்து தொலைபேசியில் தகவல் தெரிவித்திருக்கின்றார் சம்பந்தன்.

வெள்ளியன்று மாலை தமது இல்லத்தில் தம்மை செல்வமும், சித்தார்த்தனும், மற்றொரு எம்.பியும் சந்தித்தபோது மேற்படி விடயங்கள் தொடர்பில் அவர்களினால் தம்மிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன என்றார் சம்பந்தன்.

*"இது நாடாளுமன்றக் குழுவின் விவகாரம், அங்குதான் பேசி முடிவெடுக்க வேண்டும். அங்கு பேசி முடிவெடுக்கலாம் என்றுதான் சொன்னேன்"* – எனச் சம்பந்தன் ஐயா விளக்கமளிக்க முயன்றாராம். இடை மறித்தார் சுமந்திரன்.

*"அப்படித்தான் நடந்திருக்கும் என்பது எனக்கு நூற்றுக்கு இருநூறு வீதம் தெரியும். அது தெரிந்தபடியால்தான் அது குறித்து நான் எதுவும் உங்களுடன் பேச முயலவில்லை.*

*"அவர்கள் என்ன கேட்டிருப்பார்கள், நீங்கள் என்ன பதில் கூறியிருப்பீர்கள் என்பவை எனக்கு மிக நன்றாகத் தெரியும். நீங்கள் எதுவும் அது குறித்துக் குறிப்பிடத் தேவையில்லை ஐயா...!"* – என்ற சாரப்பட உரிமையுடன் பதிலளித்தாராம் சுமந்திரன்.

*"இல்லை ... இல்லை... உங்களுக்கு எல்லாம் விளங்கும் – புரியும் – என்பது எனக்குத் தெரியும். ஆனால் பத்திரிகைகளில் பல விதமாகச் செய்திகள் வந்துள்ளன. அதனால் நிலைமையைத் தெளிவுபடுத்தினால் நல்லது என்பதற்காக விடயங்களைக் கூறினேன். "* – என்றாராம் சம்பந்தன்.

சம்பந்தன் – சுமந்திரன் புரிந்துணர்வு ஆழமானது. வெளித் தரப்புகள் ஆப்பு வைப்பது கஷ்டம்தான்...!

–மின்னல்–

## 50 ஆயிரம் பட்டதாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டாபய ராஜபக்ஷ, வழங்கிய தேர்தல் உறுதிமொழியின் படி இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த பதவிக்கு 2019 டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் பட்டம் முடித்தவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என அமைச்சர் குறிப்பிட்டார்.

முதல் கட்டமாக, பொது சேவைக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்காக சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்களுக்கு 50 ஆயிரம் நியமனக் கடிதங்களை அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 10 ஆயிரம் பட்டதாரி பயிற்சி நியமனக் கடிதங்கள் விரைவில் வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்துப் பட்டதாரிகளின் தகவல்களையும் உள்ளடக்கிய ஒரு தரவுத்தளத்தை அரச சேவைகள் அமைச்சின் அதிகாரிகள் தயார் செய்துள்ளனர் என்றும் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் கூறினார்.

## எலிக் காய்ச்சலால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தநிலையில், அந்தக் காலப்பகுதிக்குள் எலிக்காய்ச்சலினால் அதிக அளவில் பாதிக்கப்பட்ட மாவட்டமாக இரத்தினபுரி அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன்படி, இரத்தினபுரி மாவட்டத்தில் ஆயிரத்து 146 பேருக்கு எலிக்காய்ச்சல் ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், அந்தக் காலப்பகுதிக்குள் மொனராகலை மாவட்டத்தில் எந்தவொரு எலிக்காய்ச்சல் நோயாளியும் அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்திய அறிவிப்புகள் ஆகும். இது மக்களுக்கும் தெரிந்துவிட்டது. இதன் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட ஏனைய அடிப்படைவாதக் கட்சிகளுக்கு மக்கள் ஆதரவு குறைந்து இருக்கின்றது. இது சாதகமானதொரு விடயமாகும். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அடிப்படைவாதக் கட்சிகளை தோற்கடிப்பதற்கு வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்துத் தமிழ் மக்களும் எதிர்காலத்தில் ஒன்றுதிரள்வார்கள் என நம்புகின்றேன் – என்றார்.

# கிணற்றில் விழுந்து சிறுவன் சாவு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை, கிண்ணியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பூவரசன்தீவு பகுதியில் 07 வயது சிறுவன் ஒருவன் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது. இவ்வாறு உயிரிழந்த சிறுவன் கிண்ணியா – பூவரசன்தீவு பகுதியைச் சேர்ந்த முஹம்மது நிஜாம் முஹம்மது அஸ்மி (07வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா திடீர் மரண விசாரணை அதிகாரி கே.நெஹ்மத்துல்லாஹ் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக திரு கோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்குக் கட்டளையிட்டார்.

சடலம் நேற்று திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

பிரேத பரிசோதனையை அடுத்து சிறுவனின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் எனக் கூறப்பட்டது.

## சஜித் அணியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருவைத் தலைவராக்கும் திட்டத்துக்கு ஐ.தே.கவுக்குச் சார்பான சிவில் அமைப்புகளும், தொழிற்சங்கங்களும் ஆதரவு வழங்கியுள்ளன.

எனவே, விரைவில் ஐ.தே.கவின் தலைமைப் பதவியை கரு ஜயசூரிய பொறுப்பேற்பார் எனக் கூறப்படுகின்றது.

கரு ஜயசூரிய ஐ.தே.க. தலைவரான பின்னர் சஜித் அணியுடன் கூட்டணி அமைக்கப்படவுள்ளது. கூட்டணியின் தலைவராக சஜித்தும், ஐ.தே.கவின் தலைவராக கருவும் செயற்படவுள்ளனர். இரு அணிகளையும் இணைப்பதற்கான பேச்சு ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது.

இதன்படி இரு அணிகளும் தோழமைக் கட்சிகளும் இணைந்து பலமான அணியாக மாகாண சபைத் தேர்தலில் குதிக்கவுள்ளன.

## கருவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் பொதுச்செயலாளராக மங்கள சமரவீர தெரிவுசெய்யப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

பொதுத்தேர்தலில் ஏற்பட்ட தோல்வியின் பின்னர் மங்கள சமரவீரவுக்கு அழைப்பை ஏற்படுத்திய ரணில் விக்கிரமசிங்க அவரை உடனடியாகக் கொழும்புக்கு அழைத்து, கட்சி மறுசீரமைப்பு பற்றி கலந்துரையாடியுள்ளார்.

இதன்படி மங்கள சமரவீரவால் மறுசீரமைப்பு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. கட்சியின் தலைமைப் பதவியை கரு ஜயசூரியவுக்கு வழங்குமாறும் கோரியுள்ளார். எனவே, கரு ஜயசூரிய தற்போது தலைமைப்பதவி தொடர்பில் விடுத்துள்ள அறிவிப்பின் பின்னணியில் மங்கள சமரவீரவே செயற்படுகின்றார் எனக் கூறப்படுகின்றது.

கரு ஜயசூரியவின் கோரிக்கையை ஏற்று அவருக்கு தலைமைப் பதவி வழங்கப்படும் பட்சத்தில் பொதுச்செயலாளர் பதவி மங்களவுக்கு வழங்கப்படலாம் எனவும், இது தொடர்பான கோரிக்கையை அவர் ஏற்கனவே முன்வைத்துள்ளார் எனவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

## போதைப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேடமாக சிறைச்சாலைகளின் வெளியில் பாதுகாப்பிற்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முடக்கப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் சிறைச்சாலையின் உள்நுழையும் அதிகாரிகள், சிறைகைதிகளை சோதனை செய்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இடைக்காலக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோடி ரூபா பாதுகாப்பு அமைச்சுக்கு என ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் நிதியமைச்சுக்கு 13 ஆயிரத்து 600 கோடி ரூபாவும் நகர அபிவிருத்திக்கு 2 ஆயிரத்து 700 கோடி ரூபாவும் புத்த சாசன அமைச்சுக்கு 280 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் செலவீனங்களுக்காக ஒரு லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாவை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கடன்கள் மூலம் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் இடைக்காலக் கணக்கறிக்கை எதிர்வரும் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாடு தழுவிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தநிலையில், இந்தப் பிரச்சினைக்கு மின்சக்தி அமைச்சுதான் பொறுப்புக்கூற வேண்டும் என்று உறுதியானால், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப் பின்நிற்க மாட்டேன் எனவும், பதவியைத் துறக்கத் தயார் எனவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஊடகங்களுக்கு ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

கெரவலபிட்டியவிலிருந்து மின்சாரம் வழங்கும் கிரிட் உப மின்நிலையத்தில் ஏற்பட்ட மனிதத் தவறு காரணமாக கடந்த 17 ஆம் திகதி பிற்பகல் 12.45 மணி முதல் சுமார் 7 மணி நேரத்திற்கு அதிகமான காலப் பகுதியில் நாடு முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து இது தொடர்பில் ஆராயவும், மீண்டும் இவ்வாறான விடயம் நிகழ்வதற்கான வாய்ப்பைக் குறைப்பதற்கான வழிகளைக் கண்டறியவும் ஏழு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தேசிய மின் கட்டமைப்பில் ஏற்பட்ட தடை குறித்து ஆராய மின்சக்தி அமைச்சால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவுக்கு, இலங்கை மின்சார சபையின் தொழில்நுட்ப பொறியாளர்கள் மற்றும் அத்தியட்சகர்களின் சங்கம், 8 விடயங்கள் அடங்கிய அறிக்கையொன்றை கடந்த சனிக்கிழமை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்கள் இனியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் பல ஏமாற்றங்களை சிங்களத் தலைவர்களால் எதிர்கொண்டுள்ளோம். குறிப்பாக, இரு பெரும்பான்மை கட்சிகள் இணைந்த நல்லாட்சி அரசுடன் நாம் இணைந்து பயணம் செய்தபோதும் சில விடயங்களில் நன்மையடைந்தாலும் மக்களின் தீர்வு விடயத்தில் முன்னேற்றம் காணப்படவில்லை.

தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாசைகளை ஒத்ததான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றவர்களோடு இணைந்து பயணிக்க நாம் தயாராக இருக்கின்றோம்.

ஒற்றுமையின் அடிப்படையில் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு, அதிக ஆசனத்தைப் பெறுவதற்குரிய முயற்சியை நாம் மேற்கொள்வோம்.

எதிர்காலத்தில் பலமான கட்டமைப்பை அம்பாறை மாவட்டத்தில் உருவாக்குவதுடன், பல பணிகளை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு எனக்குள்ளது. ஆனாலும், கடந்த தேர்தலில் சிலர் மாற்று முடிவுகளை மேற்கொண்டனர். இருந்தபோதிலும் அவர்களையும் இணைத்தே எமது பயணம் தொடரும் – என்றார்.

# வாள் வெட்டுச் சந்தேக நபர் ஒரு வருடத்தின் பின் கைது

கடந்த வருடம் அல்வாய் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர் அல்வாயைச் சேர்ந்த 30 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அல்வாய் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் நால்வர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இதன்போது ஐந்தாவது சந்தேக நபர் எனக் கூறப்பட்ட இளைஞர் ஒருவர் கைதாகியுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

அவரைப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவில் இருந்து 110 பேர் இலங்கைக்கு

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக இந்தியாவில் நிர்க்கதிக்குள்ளாகி இருந்த 110 இலங்கையர்கள் நேற்று நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இந்தியாவின் புதுடில்லியில் இருந்து ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யூ.எல் -1192 எனும் விமான சேவை ஊடாக நேற்று பிற்பகல் 2.40 மணியளவில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அவர்கள் வந்தடைந்துள்ளனர்.

அவர்கள் அனைவரும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# தம்மிஷ்டப்படி மைத்திரியை சஜித் உள்வாங்க முடியாது!

## கூட்டணித் தலைவர்களின் உடன்பாடு அதற்கு மிக முக்கியம் என்கிறார் மனோ



(பிரபாகரன் டிலக்சன்)

கொழும்பு, ஓக.25

ஐக்கிய மக்கள் சக்திக்குள் மைத்திரிபால சிறிசேன போன்றவர்களை உள்வாங்குவதாக இருந்தால் கூட்டணித் தலைவர்களின் உடன்பாடு மிக அவசியம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோகணேசன் தெரிவித்தார்.

சமகால அரசியல் தொடர்பில் 'காலைக்கதிர்' பத்திரிகைக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய மக்கள் சக்தி சஜித் பிரேமதாசவிற்கு மட்டும் உடைமையானது அல்ல. கூட்டணித் தலைவர்களாகிய நாங்களும் உடைமையாளராக இருக்கின்றோம். யாரும் யாருடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தலாம். ஆனால் ஐக்கிய மக்கள் சக்திக்குள் புதிதாக யாரையும் உள்வாங்குவதாக இருந்தால் கூட்டணித் தலைவர்களின் உடன்பாடும் அவசியம்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் க.வி.விக்னேஸ்வரனது உரையினை நாடாளுமன்றப் பதிவில் இருந்து நீக்குமாறு மனு நாணயக்கார கூறியது அவரது தனிப்பட்ட கருத்தாகும். அவருடைய கருத்து ஐக்கிய மக்கள் சக்தியின் கருத்தாக அமைந்து விடாது.

இலங்கையின் வரலாற்றை பார்க்கின்ற போது விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இங்கு இயக்கர், நாகர் என்ற இரு திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்ததாக மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது.

அது போல மகாவம்சத்தை விட காலத்தால் முற்பட்ட இதிகாசமாகிய இராமாயணத்தில் இலங்கைத் தீவு பற்றியும் அதன் மன்னனும் சிவ பக்தனுமாகிய இராவணன் பற்றியும் கூறப்பட்டுள்ளது. எனவே தமிழர்கள் இலங்கையின் மூத்த குடிகள் என கூறுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. – என்றார்.

# பழிவாங்கல் ஆணைக்குழுவில் தலதா, பூஜித் நேற்று முன்னிலை

கட்டாய விடுமுறையிலுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவும், முன்னாள் அமைச்சர் தலதா அத்துகோரளவும் நேற்று முற்பகல் அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகினர்.

எதிர்வரும் 14ஆம் திகதி மீண்டும் குறித்த ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்ட பின்னர், அவர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

குறித்த சாட்சியமளிப்பு தொடர்பில் பிரதிவாதியாகப் பெயரிடப்பட்டுள்ள பிரதி தங்களுக்குக் கிடைக்கவில்லை என சட்டத்தரணி ஊடாக தெரிவித்தமைக்கு அமைய குறித்த தினத்தில் மீண்டும் முன்னிலையாவார்கள் எனத் தெரிவித்து, அவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவ் இந்த ஆணைக்குழுவில் அளித்த முறைப்பாடு தொடர்பாக அவர்கள் இருவரும் நேற்று ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகின் மின்னல் வேக ஓட்ட வீரரான உசைன் போல்ட்டுக்கும் கொரோனா!




உலகின் மின்னல் வேக மனிதன் என அழைக்கப்படும் ஜமேக்காவைச் சேர்ந்த பிரபல ஓட்டப் பந்தய வீரர் உசைன் போல்ட்டுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னரேயே உசைன் போல்ட் தனது 34 ஆவது பிறந்தநாளை கொண்டாடினார்.

அப்போது அவருடன் இங்கிலாந்து கால்பந்து வீரர் ரஹீம் ஸ்டெர்லிங் மற்றும் நெருங்கிய நண்பர்கள் பல்வேறு விளையாட்டு பிரபலங்களும் பங்கேற்றனர்.

இதனையடுத்து உடல் நலம் பாதிக்கப்பட்ட அவர் நேற்று கொரோனா பரிசோதனை மேற்கொண்டார். அதில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து சமூகவலைதளத்தில் கொரோனா தொற்றால் தாம் பாதிக்கப்பட்டுள்ளார் என குறிப்பிட்டுள்ளார்.

# ஐயாயிரம் ரூபா போலி நோட்டு; பொலிஸாரால் இருவர் கைது!

எரிபொருள் நிலையமொன்றில் போலி ஐயாயிரம் ரூபா நோட்டைல் கொடுத்தனர் என்று கூறப்படும் இரு இளைஞர்களை எல்ல பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

எல்ல பொலிஸ் பிரிவைச் சேர்ந்த ஹெலஹல்ப்பே எரிபொருள் நிலையத்தில், மோட்டார் சைக்கிளொன்றிற்கு எரிபொருளை நிரப்பிக் கொண்டு, அம் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவர் தம்மிடமிருந்த ஐயாயிரம் ரூபா நோட்டை எரிபொருள் நிலையத்திற்கு வழங்கினர்.

பணத்தைப் பெற்ற எரிபொருள் நிலையத்தினர், அந் நோட்டில் மாற்றமொன்றினைக் கண்டு, அது குறித்து எல்ல பொலிஸாருக்கு அறிவித்தனர். உடனடியாக அங்கு விரைந்த பொலிஸார் பணநோட்டைப் பரிசீலனை செய்தபோது, அந்த நோட்டுப் போலி என்பதை உறுதிப்படுத்தி, அந்நோட்டை வழங்கிய இரு இளைஞர்களையும் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இவ்விருவரும், விசாரணையின் பின்னர் பண்டாரவளை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவரென்று, எல்ல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.கே.எம். அழகியவண்ண தெரிவித்தார்.

# மாகாணசபைத் தேர்தல்களில் சு.க. தனிவழி செல்ல முடிவு?

மாகாணசபைத் தேர்தலில் தனித்து களமிறங்குவது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆராய்ந்து வருவதாக அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

இலங்கையில் வடக்கு, கிழக்கு உட்பட 9 மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ள அரசாங்கம், அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இதன்படி இடைக்கால கணக்கறிக்கையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே, மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வதற்காக பிரதான அரசியல் கட்சிகள் தயாராகிவருகின்றன.

இந்நிலையிலேயே தேர்தல் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் அவதானம் செலுத்தியுள்ளது. அண்மையில் நடைபெற்ற சு.கவின் மத்தியசெயற்குழுக் கூட்டத்திலும் இது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.



நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் நுவரெலியா, களுத்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தனித்தும் ஏனைய மாவட்டங்களில் மொட்டுடனும் இணைந்து சுதந்திரக்கட்சி போட்டியிட்டது. எனினும், மொட்டு கட்சியால் சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுக்கு கடும் நெருக்கடிகள் கொடுக்கப்பட்டன. பிரசாரங்களின்போது சரமாரியாக வார்த்தைத் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. ஆசனப்பங்கீட்டிலும் அநீதி இழைக்கப்பட்டது என்ற கருத்து நிலவுகின்றது.

எனவேதான் மாகாணசபைத் தேர்தலில் தனிவழி செல்வது பற்றி ஆராயப்பட்டுவருகின்றது. இதன்படி சில மாகாணங்களில் தனித்தும் சில மாகாணங்களில் கூட்டுப் பயணத்தையும் சு.க.மேற் கொள்ளலாம் என நம்பப்படுகின்றது.

சுதந்திரக்கட்சியின் வருடாந்த மாநாடு செப்டம்பர் 2ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. இதன்போது மாகாணசபைத் தேர்தல் தொடர்பிலும் தீர்மானமொன்று நிறைவேற்றப்படவுள்ளது என அறியமுடிகின்றது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாதனமுத்தாக்களின் சீற்றம்

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய கன்னி உரை தெற்கில் பெரும் கடுப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

அவர் உரையாற்றிய சமயம் அதைக் குறுக்கிட்டு ஆட்சேபம் தெரிவிக்காத விமல் வீரவன்ஸ போன்ற பேரினவாதப் பிரகிருதிகள், எல்லாம் முடிந்த பின்னர் இப்போது பெரும் கூக்குரலிடுகின்றனர்.

இவ்வளவுக்கும் தென்னிலங்கை பேரினவாதிகள் பெரும் சர்ச்சையாகக் குறிப்பிடும் விடயங்கள் எதனையும் நீதியரசர் விக்னேஸ்வரன் தமிழில் பேசவில்லை. ஆங்கிலத்தில்தான் பேசினார்.

அந்த உயர்தர ஆங்கிலத்தில் நீதியரசர் விக்னேஸ்வரன் பேசியவற்றையோ, அல்லது அச்சமயம் உடனடியாக - சமநேரத்தில் - வழங்கப்பட்ட சிங்கள மொழி பெயர்ப்பையோ புரிந்து கொள்ள முடியாமல் வாளாவிருந்த பேரினவாத சக்திகள், வெளியிலிருந்த தரப்புகள் உசுப்பேற்றி விட்டதும் இப்போது கத்திக்குளறுகின்றன.

நீதியரசர் விக்னேஸ்வரனின் அந்தக் கன்னி உரையின் சில முக்கிய பகுதிகளை நாடாளுமன்றப் பதிவிலிருந்து - ஹன்சார்ட்டிலிருந்து - நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை சஜித் அணியின் ஐக்கிய மக்கள் சக்தி தரப்பிலிருந்து ஓர் எம்.பி. அடுத்த நாள் விடுக்கின்றார்.

பேரினவாதத்தைக் கிளப்பி, சிங்கள - பௌத்த இன உணர்வை தட்டி எழுப்பி, அதன் மூலம் ராஜபக்ஷக்கள் அடுத்தடுத்து வந்த தேர்தல்களில் தென்னிலங்கையில் தூள் கிளப்பி விட்டமையால், தேர்தல் அறுவடைக்கு இனிமேல் இனவாதம்தான் வழி என்ற சகதிக்குள் - மார்க்கத்துக்குள் - விழுவதற்கு சஜித்தின் தரப்பும் தயாராகி விட்டது என்று தென்னிலங்கையில் ஏற்கனவே தகவல்கள் கசிந்திருந்தன. அவற்றை உறுதிப்படுத்துமாற் போல நீதியரசர் விக்னேஸ்வரனின் உரை தொடர்பில் அவரது கட்சி எம்.பியின் நாடாளுமன்ற ஆட்சேபனை அமைந்திருக்கின்றது.

மறுபுறத்தில் விக்னேஸ்வரனின் உரை தொடர்பில் விமல் வீரவன்ஸ வழமைபோல வானுக்கும் பூமிக்கும் துள்ளிக் குதிக்கின்றார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் தமது பங்குக்கு ஒரு பிடிபிடித்துத் தள்ளுகின்றார்.

புதிய சபாநாயகரை வரவேற்கும் உரையில் சில சர்ச்சைக்குரிய விடயங்களை நீதியரசர் விக்னேஸ்வரன் தவிர்த்திருக்கலாம்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அப்படித்தான் நடந்து கொண்டார். புதிய சபாநாயகரை 'மிஸ்டர் ஸ்பீக்கர்' என்று மேற்கத்திய பாணியில் விளிப்பதுடன் நிறுத்திக் கொண்ட அவர், சபாநாயகரை வரவேற்கும் உரையில் நாகரிகமாகவும் நளினமாகவும் நடந்து கொண்டார். ஆனால் அடுத்துக் கிடைத்த - ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான - விவாதத்தில் தமது பேரனார் ஜி.ஜி.பொன்னம்பலத் தின் பிடியை பிடித்துத் தள்ளினார்.

ஆனாலும் விக்னேஸ்வரனின் பிரச்சினை வேறு. கஜேந்திரகுமார் ஏற்கனவே எம்.பியாக இருந்தவர். ஆனால் விக்னேஸ்வரனைப் பொறுத்தவரை இலங்கை நாடாளுமன்றத்தில் இதுதான் அவரது முதல் உரை. இந்தக் கன்னி உரையிலேயே தாம் எத்தகைய இனத்தின் பிரதிநிதியாக வந்திருக்கின்றார் என்பதை அறுத்து, உறுத்துத் தெளிவாக எடுத்தியம்ப விரும்பிய அவர், அந்த உண்மையை வெளிப்படையாகக் கூறியமைக்காகத்தான் இப்படி தென்னிலங்கைச் சிங்களத்தினால் வறுத்தெடுக்கப்படுகின்றார்.

*"தமிழ் மிகவும் தொன்மையான மொழி, இலங்கையின் மூத்த குடிகளாக தமிழர்களே இருந்தார்கள். அதனால் அவ்வாறான மக்களுக்கு இறையாண்மை இருக்கின்றது."* - என்று விக்னேஸ்வரன் கூறியமைக்காக இவ்வளவு தூரம் பதற்றமடையும் சிங்களம் அதன் மூலம் தனது பேரினவாதப் பண்பியல்பை - நிலைப்பாட்டை - அப்படியே வெளிப்படுத்தி நிற்கின்றது.

இந்த இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் கூட்டாட்சியைக் கோரிப் போராடுவது தவறல்ல என்று சிங்களத்தின் உயர்நீதிமன்றமே தனது தீர்ப்பு ஒன்றில் கூறியுள்ள பின்னணியில் நீதியரசர் விக்னேஸ்வரனின் கூற்றுத் தொடர்பில் சட்டரீதியாக எதுவும் பிடுங்கி விட முடியாது என்பதுதான் உண்மை.

தமிழ் மொழி தொன்மையானது, தமிழர்கள் இலங்கைத் தீவின் பூர்வீக குடிகள் என்பவை எல்லாம் வரலாற்று ரீதியான உண்மைகள். அவற்றை வரலாற்று ரீதியாக நிரூபிக்கும் சான்றுகள் தமிழர்களிடம் உள்ளன.

தான் ஓர் அரசு என்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டு - தென்னிலங்கைச் சிங்களம் திரிவுபடுத்தப்பட்ட புனை கதைகளையும், அர்த்தமற்ற கற்பிதங்களையும் சோடித்து வைத்துக் கொண்டு - தமிழர்களை வந்தேறு குடிகள் போல காட்ட முயல்கின்றது. தனது இனவாத அடக்குமுறை மூலம் அதையே நிஜமாக்கி விடலாம் என்று அது துடியாய்த் துடிக்கின்றது. நாட்டின் நாடாளுமன்றம் என்ற ஜனநாயக அவையின் நடுமத்தியில் நின்று அந்த புனைகதைக் கற்பிதங்களுக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் கொடுத்த சூடு, மாதன முத்தாக்களைக் குழப்பிவிட்டது. அவ்வளவுதான்.

# காணாமலாக்கப்பட்டோருக்கான போராட்டத்துக்கு பெரும் ஆதரவு

## விக்கியின் கூட்டணியும் வழங்குகிறது

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சர்வதேச தினமான எதிர்வரும் 30ஆம் திகதியன்று வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நடத்தப்படும் கவனயீர்ப்புப் போராட்டம் மற்றும் பேரணிகளுக்கு தமிழ் மக்கள் தேசிய கூட்டணி முழுமையான ஆதரவைத் தெரிவித்துக் கொள்வதுடன் பொதுமக்களை இந்த நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கின்றது.

– இவ்வாறு கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பௌத்த, சிங்களப் பேரினவாத அரசாங்கம் நாட்டில் அசுர பலத்துடன் ஆட்சி அமைத்துள்ள நிலையில் தமிழ் மக்கள் தமக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான நீதியைப் பெற்றுக்கொள்ளும் போராட்டங்களைத் தீவிரப்படுத்த வேண்டிய அவசியமான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், எதிர்வரும் 30 ஆம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தின போராட்ட நிகழ்வுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்று நடத்தப்படும்போதுதான் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கிடைப்பது சாத்தியமாகும். அதனால், சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்றுக்கான ஏற்பாடுகளை சாத்தியமான எல்லா வழிகளையும் பயன்படுத்தி மேற்கொள்ளுமாறு ஐ.நா. மற்றும் சர்வதேச சமூகம் ஆகியவற்றை வலியுறுத்தி நடத்தப்படும் இந்தப் போராட்டங்களில் பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களை முழுமையான ஆதரவு வழங்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

வட மாகாணத்தில் யாழ். பேருந்து நிலையத்தில் இருந்து பேரணி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்த பேரணி யாழ் மாவட்ட செயலகம் வரை சென்று அங்கே ஐ.நாவிடம் கையளிக்கப்படுவதற்கான மகஜர் ஒன்று கொடுக்கப்படவிருக்கின்றது. அதே போல கிழக்கு மாகாணத்தில் கல்லடி பாலத்தில் இருந்து பேரணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த பேரணி காந்தி பூங்கா வரை சென்று ஐ.நாவுக்கான மகஜர் ஒன்றைக் கையளிக்கவிருக்கின்றது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் விழிப்புணர்வோடு இருந்துமேற்படி பேரணிகள் பெரு வெற்றியடைய தமது ஆதரவை வழங்குவார்களாக.

– என்று விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

# கடலில் மூழ்கி மாயமான இளைஞரின் சடலம் மீட்பு

கொழும்பு, ஓக 25

கல்கிஸை கடலில் நீராடச் சென்ற நிலையில் காணாமற் போன இருவரில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் இவ்வாறு நீராடச் சென்றவர்களில் 7 பேர் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில், அவர்களில் ஐவர், கல்கிஸை பொலிஸ் உயிர்காப்பு பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளால் காப்பாற்றப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில் காணாமல்போன 18, 19 வயதுடைய இருவரில் 19 வய தான இளைஞரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



இந்த இளைஞர், பூண்டுலோயாவைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# அரச நியமனம் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகள் ஆளுநருக்கு மகஜர்!

## யாழ்ப்பாணத்தில் இன்று கையளிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 25

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச நியமனங்கள் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகள் வடக்கு மாகாண ஆளுநரிடம் நேற்று மகஜர் கையளித்தனர்.

அரசால் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு நாடு முழுவதும் வழங்கப்படவுள்ளன. இதற்கான நியமனக் கடிதங்கள் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரத்து 450 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகளுக்கான நியமனங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன எனக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் நியமனம் நிராகரிக்கப்பட்ட பட்ட தாரிகள் ஒன்றிணைந்து கலந்துரையாடியதோடு வடக்கு மாகாண ஆளுநரிடம் தமது நியமனத்தை உறுதிப்படுத்துமாறு கோரி மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

அந்த மகஜரில் நிராகரிக்கப்பட்ட காரணங்களாக குறிப்பிடப்பட்டுள்ள ஓழியர் சேமலாப நிதி பிரச்சினை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை முடித்தவர்களுக்கான பிரச்சினை மற்றும் 45 வயதிற்கு மேற்பட்டவர்களின் பிரச்சினை போன்ற மூன்று விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் தொடர்பாக உரிய தரப்பினருக்கு அதனை தெளிவுபடுத்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கான நியமனத்தை வழங்க ஆவன செய்யுமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

ஏற்கனவே அரசால் நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பட்டதாரிகள் எதிர்வரும் மாதம் 2ஆம் திகதி தமது கடமைகளை ஆரம்பிக்கும் நிலை யில், நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கும் எதிர்வரும் 2ஆம் திகதிக்குள் உரிய தீர்வு பெற்றுத்தரவேண்டும் என பட்டதாரிகள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இலஞ்சம் ஊழல் என்பவற்றை கையாள்வதற்கு புதிய சட்டம்!

## என்கிறார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, ஓக.25

விளையாட்டுகளில் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுக்கும் விதமாக நவீன முறையில் புதிய சட்டம் காணப்பட வேண்டுமென விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

ஊழல் எதிர்ப்பு மற்றும் லஞ்சம் தொடர்பான ஏற்பாடுகள் புதிய விளையாட்டுச் சட்டத்தில் பெரிதும் இடம்பெறும்.

மேலும், இந்தச் சட்டத்தை வகுப்பது தொடர்பாக ஆராய ஒரு குழுவை, தேசிய விளையாட்டு சபை நியமிக்கும்.

இந்தக் குழு, விளையாட்டுசபையால் நியமிக்கப் படும். நாங்கள் அதை நீதி அமைச்சருடன் கலந்துரையாடுவோம். பொதுக்கருத்தும் கோரப்படும்.

அதாவது, சட்டத்தில் என்ன சேர்க்கப் படலாம் என் பது தொடர்பாகப் பொதுக் கருத்துக்கள் சேகரிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 17 வயதுப் பெண்ணை சீர்கெடுத்த இளம் குடும்பஸ்தர் விளக்கமறியலில்

## சம்பூர் பகுதியில் சம்பவம்

சம்பூரில் பதினேழு வயதுடைய பெண்ணொருவரை துஷ்பிரயோகத்திற்குட் படுத்திய இரண்டு பிள்ளைகளின் தந்தை யொருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீதனவெளி - சேனையூர் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்துக் கூறப்படுவதாவது:-

சந்தேக நபர் தனது வீட்டுக்கு அயல் வீட்டில் வசித்து வந்த பதினேழு வயதுடைய பெண்ணொருவரைக் காதலித்து வந்துள்ளார்.

சந்தேக நபரின் மனைவி சம்பூர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய இவரைத் தாம் கைது செய்தனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நபரை மூதூர் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்திய போதே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் உத்தரவிட்டார்.

பெண், மருத்துவபரிசோதனைக்காக மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

# வடக்கில் ஒரேநேரத்தில் பல பயன் பெறும் திட்டம்!

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு




யாழ்ப்பாணம், ஓக.25

வடக்கில் விவசாயத் துறையையும் நீரியல் வளச் செய்கையினையும் ஒரேநேரத்தில் மக்கள் பயன்பெறும் வகையில் முன்னெடுக்க முடியும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் விவசாயத்திற்கு பொருத்தமான பாரியளவு வயற் காணிகள் மற்றும் தோட்ட நிலங்கள் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன எனத் தெரிவித்துள்ள அவர், பயனற்று உள்ள குளங்கள், வாவிகளை மீள பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதன் ஊடாக இந்தப் பயன்களைப் பெறமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இத்தகைய காணிகள் அனைத்தையும் விவசாயச் செய்கைக்காக விடுவித்து மானிய மற்றும் இலகு கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விவசாய செய்கையை மேம்படுத்தி பரவலாக்குவதும் அதிகூடிய விளைச்சலை ஏற்படுத்துவதும் எமது நோக்கமாக இருக்கின்றது.

இதன்மூலமாக நெல் உற்பத்தியுடன் உப உணவுப் பயிர்களை அதிகளவில் உற்பத்தி செய்வதன் ஊடாக அவற்றின் இறக்குமதிகளை நிறுத்தி உணவு உற்பத்தியில் எமது நாட்டைத் தன்னிறைவு காணச்செய்வதே எமது ஆரம்ப இலக்காகும். அதன் அடுத்த இலக்கு ஏற்றுமதிக்கான வழியேற்படுத்தலாகும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அத்துடன், குளங்கள், வாவிகள் புனரமைப்பு மற்றும் மறுசீரமைப்பு தொடர்பாகவும் ஜனாதிபதி ஆலோசனை முன்வைத்துள்ளார். அந்தவகையில் வடக்கிலுள்ள குளங்கள், வாவிகள் மீள் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதன் ஊடாக விவசாயத் துறையை மட்டுமல்லாது நீரியல் வள செய்கையினையும் ஒரே நேரத்தில் மக்கள் பயன்பெறுகின்ற வகையில் மேற்கொள்ள முடியும் என நான் நம்புகின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

# பிரதமர் உள்ளிட்ட அனைத்து எம்.பிக்களுக்கும் நாடாளுமன்ற நடவடிக்கை தொடர்பான பயிற்சி!

கொழும்பு, ஓக.25

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவுபடுத்தும் பயிற்சி நெறியில் கலந்துகொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அனைத்துநாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்த பயிற்சிநெறி இன்று (செவ்வாய்க்கிழமை) மற்றும் புதன்கிழமை ஆகிய நாள்களில் நாடளுமன்றத்தின் முதலாவது குழு அறையில் இடம்பெறவுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க அறிவித்துள்ளார்.

இந்த பயிற்சி நெறியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாடாளுமன்றத்தின் ஆரம்பகட்ட விடயங்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்தும் நோக்கில், இந்த பயிற்சிநெறி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குருநாகல் அரசவை தகர்ப்பு விவகாரம் பிடியாணை தொடர்பான தீர்ப்பு இன்று

குருநாகல் அரசவை தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பாக குருநாகல் நகரசபை மேயர் உள்ளிட்டவர்கள் மீது பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணை தொடர்பான தீர்ப்பு இன்று வழங்கப்படவுள்ளது.

புவனேகபாகு மன்னரின் அரசவை தகர்க்கப்பட்டமை தொடர்பான விசாரணைகள் இடம் பெற்றுவரும் நிலையில், இதுதொடர்பாக குருநாகல் நகர முதல்வர் துஜுர சஞ்ஜீவ விதாரணவுடன் மேலும் நால்வருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட் டிருந்தது.

இந்நிலையில், தம்மைக் கைதுசெய்யுமாறு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணையை இரத்துச் செய்யுமாறு கோரி, குருநாகல் நகர முதல்வர் மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிப் பேராணை மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இதனையடுத்து, அவர்களை ஓகஸ்ட் 24 ஆம் திகதி அதாவது நேற்று வரை கைது செய்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.

இந்த நிலையில், நகரசபை மேயர் உள்ளிட்டவர்கள் மீது பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணையை நடைமுறைப்படுத்துவதா? இல்லையா? என்பது தொடர்பான தீர்ப்பை இன்றைய தினம் அறிவிக்கவுள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# சிறைச்சாலை பாதுகாப்புக்கு விசேட அதிரடிப்படையினர்!

கொழும்பு, ஓக.25

சிறைச்சாலைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக விசேட அதிரடிப்படையினரை ஈடுபடுத்தும் நடவடிக்கை நேற்று (திங்கட்கிழமை) முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சிறைச் சாலைகள் ஆணையாளர் நாய கம் துஜுர உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

இதற்கமைய வெலிக்கடை, மெகசின், கொழும்பு ஆகிய சிறைச்சாலைகளில் நேற்று முதல் விடே அதிரடிப்படையி னர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் கைதிக ளைப் பார்வையிடுவதற்கு வருகைதரும் உறவினர்களைச் சோதனைக்குட்படுத்தும் நடவடிக்கை விஷேட அதிரடிப்படையினரால் முன்னெடுக்கப் படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பூஸா மற்றும் அங்குனுகொல பெலஸ்ஸ சிறைச்சாலைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# சம்பந்தன், விக்கியின் இனவாத அரசியலை தோற்கடிக்கவேண்டும்!

## விமல் வீரவன்ஸ சூளுரை



கொழும்பு, ஓக.25

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரின் இனவாத அரசியலைத் தோற்கடிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள அமைச்சர் விமல் வீரவன்ஸ, அனைத்து இனங்களுக்கும் சம அந்தஸ்து வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் குறிப்பிட்டார்.**

ஹோமாகமவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர்–

திருமண வீடொன்றுக்கு ஒருவர் குடித்து விட்டு வந்து சர்ச்சைகளில் ஈடுபட்டால், ஏனையவர்கள் அச்சப்பட மாட்டார்கள். அதுபோன்றுதான், சி.வி.விக்னேஸ்வரனின் செயற்பாடுகளும் காணப்படுகின்றன.

அவருக்கு, சம்பந்தனைவிட பெரிய தலைவராக வேண்டும் என்பதுதான் ஆசை. தமிழர்களுக்கு யார் தலைவர் என்பதில், இவர்கள் இருவருக்கும் இடையில் போட்டி நிலவிவருகிறது.

ஆனால், விக்னேஸ்வரனுக்கு அதற்கான தகுதி கிடையாது. அவர் பிறந்து வளர்ந்தது எல்லாம் கொழும்பில். றோயல் கல்லூரியில் கல்வி பயின்றவர்.

இப்போது தமிழர்களை ஏமாற்றும் வகையில் பொய்யான ஒரு நாடகத்தைத்தான் அவர் அரங்கேற்றி வருகிறார்.

இதன் ஓர் அங்கமாகத்தான், நாடாளுமன்றுக்கு வந்து உலகிலேயே மூத்த மொழி தமிழ் மொழி என கருத்து வெளியிட்டுள்ளார். அவருக்கு நன்றாகத் தெரியும், அப்படி கூறினால் இனவாதத்தை இலகுவாகத் தூண்டிவிட முடியும் என்று.

எம்மைப் பொறுத்தவரை யாழில் இருந்து வந்த சுதந்திரக் கட்சி உறுப்பினருக்கும், கிழக்கிலிருந்து வந்த அதாவுல்லா போன்றோருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் வாய்ப்பை வழங்க வேண்டும்.

இதுதான் எமது நிலைப்பாடாகும். இதுதான் ஜனநாயகத்தை பலப்படுத்தும் வழிமுறைகளாகும். நாம் இவ்வாறான செற்பாடுகளை மேற்கொள்ளும்போதுதான் அனைத்து சமூகங்களும் முன்னேற்றமடையும்.

அப்போது மட்டும்தான், சம்பந்தன் மற்றும் விக்னேஸ்வரனின் இனவாத அரசியலுக்கும் தேவை ஏற்படாது போகும். இன்னும் சில நாள்களில் புதிய அரசமைப்பு ஸ்தாபிக்கப்படவுள்ளது. இதன் ஊடாக இந்த நாடு மேலும் பலமடையும்.

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ, ஒரு நாடு – ஒரு சட்டம் என்ற கொள்கையில் மிகவும் தெளிவாக இருக்கிறார். ஒவ்வொருவருக்கும் தேவையான வகையில் சட்டங்களை வளைக்க நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

ஜனாதிபதி இம்முறை நாடாளுமன்றுக்கு வருகைத் தந்தமையை நாம் அனைவரும் அவதானித்தோம். எந்தவோர் ஆடம்பரமும் இல்லாமல்தான் அவர் தனது வாகனத்தில் வந்தார்.

இதனை மதிக்கத் தெரியாதவர்கள்தான் இன்று எதிரணியில் இருந்துகொண்டு கூச்சலிடுகிறார்கள். அவர்களுக்கு குறைகூற எந்தவொரு காரணமும் கிடையாது என்பதால், ஜனாதிபதியின் வாகனம் வீதியின் கோட்டுக்கு இடையில் வந்ததாகக்கூடக் கூறுகிறார்கள்.

நாடாளுமன்ற வீதிக்கு, பொதுப்போக்குவரத்து சட்டங்கள் இல்லை என்பதுகூட அந்த தரப்புக்கு தெரியாமல் இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# பெருந்தோட்டத்துறை மக்கள் பிரபாகரனை ஆதரிக்கவில்லை!

## அதனாலேயே அவர்கள் துன்பம் அனுபவிக்கிறார்கள்: சஹ்ரான் தெரிவித்தார் என வாக்குமூலமளிக்கும் பிக்கு

கொழும்பு, ஓக.25

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழ் மக்களுக்காகப் போராடிய போதிலும் அவருக்குப் பெருந்தோட்ட துறை மக்கள் ஆதரவளிக்காமையினாலேயே துன்பத்தை அவர்கள் அனுபவிக்கின்றனர் என சஹ்ரான் கூறினார் என கண்டி நெல்லிகல பௌத்த சர்வதேச மத்திய நிலையத்தின் நிறுவுநர் வத்துருகும்புரே தம்மரத்தன தேரர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக் கிழமை) முன்னிலையாகியபோதே அவர் இவ்வாறு வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் 2017ஆம் ஆண்டு நெல்லிகல பௌத்த சர்வதேச மத்திய நிலையத்திற்கு வந்தபோது, சஹ்ரான் கிறிஸ்தவம் மற்றும் பௌத்த மதம் தொடர்பாகவும் அதிலுள்ள விசேட கலாசார விழுமியங்கள் தொடர்பாகவும் விவாதித்தார் எனவும், அதன் பின்னர் அவர் பாரம்பரிய முஸ்லிம்களுக்குத் தலைவர்கள் இல்லை என்று குற்றம் சாட்டினார் எனவும் தேரர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.



மேலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழ் மக்களுக்காகப் போராடிய போதிலும் அவருக்கு பெருந்தோட்டத் துறை ஆதரவளிக்கவில்லை என சஹ்ரான் தெரிவித்ததார் எனக் குறிப்பிட்ட தேரர், அவ்வாறு அவர்கள் ஆதரவளித்திருப்பார்களானால் பெருந்தோட்ட மக்கள் இன்று பல துன்பங்களை அனுபவித்திருக்க மாட்டார்கள் எனக் கூறினார் எனவும் வத்துருகும்புரே தம்மரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாடுகளில் சிக்கிய மேலும் சிலர் திரும்பினர்!

கொழும்பு, ஓக.25

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடு திரும்ப முடி யாமல் வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் சில பேர் நாடு திரும்பியுள்ளனர்.

அதற்கமைய அவர்கள் அனைவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக நேற்று (திங்கட்கிழமை) காலை நாடு திரும்பியுள்ளனர்.

டோஹா கட்டாரில் இருந்து 21 பேரும் இந்தியாவின் அகம தாபாத்தில் இருந்து 49 பேருமே இவ்வாறு நாடு திரும்பியுள்ள னர்.

நாடு திரும்பிய அனைவருக் கும் கட்டுநாயக்க விமான நிலை யத்தில் வைத்து பீ.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டன.

பரிசோதனை முடிவுகள் வெளிவந்தவுடன், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பஹ்ரைனில் இருந்து 180 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

கொழும்பு, ஓக.25

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைய கொரோனா தொற்றுக் காரணமாக பஹ்ரைனில் சிக்கித் தவித்த மேலும் 180 இலங்கையர்கள் கடந்தஞாயிற்றுக்கிழமை இரவு நாடு திரும்பியுள்ளனர்.

பஹ்ரைனிலிருந்து ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான யுஎல் – 202 என்ற விமானத்தின் மூலம் நேற்றுமுன்தினம் இரவு 8.50 மணியிளவில் இவர்கள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனை முடிவுகள் வெளிவந்தவுடன் அவர் களை முகாம்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தெஹியத்தகண்டிய விபத்தில் தந்தைசாவு; மகன் படுகாயம்

கொழும்பு, ஓக.25

தெஹியத்தகண்டிய பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றுமொருவர் படுகாயமடைந்தார்.

ஓட்டமாவடி – காவத்தமுனையிலிருந்து மீன் கொள்வனவுக்காக ஓட்டோ ஒன்றில் தெஹியத்தகண்டிக்குச் சென்ற தந்தையும் மகனும் விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இருவரும் சென்ற ஓட்டோவுடன் கூலர் வாகனம் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த ஓட்டமா வடி – காவத்த முனையைச் சேர்ந்த எஸ்.எம்.சின் னத்தம்பி (வயது 60) என்பவர் உயிரிழந்துள் ளார். ஓட்டோவைச் செலுத்திச் சென்ற அவரது மகன் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக தெஹியத்தகண்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விக்னேஸ்வரனின் கருத்தை எதிர்ப்பவர்கள் உண்மையான வரலாற்றை சொல்லத் தயாரா?

## சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்விக்கணை

ஒன்பதாவது நாடாளுமன்றத்தில் சபாநாயகரை வாழ்த்திப் பேசுகையில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முன்னாள் நீதியரசர் கௌரவ சி.வி.விக்னேஸ்வரனின் உரையை ஹன்சாட்டிலிருந்து நீக்க வேண்டும் என்று கூறுபவர்கள் உண்மையான வரலாற்றை நாட்டு மக்களுக்குச் சொல்லத் தயாரா?

– இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப்பேச்சாளரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக



அறிக்கையின் முழுவிவரம் வருமாறு:–

புதிய நாடாளுமன்றத்தில் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் முதன் முதலாக ஆற்றிய கன்னி உரை நாடாளுமன்றத்திலும் தென்பகுதியிலும் பலத்த சலசலப்புக்களை ஏற்படுத்தி இருக்கின்றது.

தமிழ் மிகவும் தொன்மையான மொழி என்றும், இலங்கையில் மூத்த குடிமக்களாக தமிழர்களே இருந்தார்கள் என்றும், அவ்வாறான மக்களுக்கு இறையாண்மை இருக்கின்றது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் சொல்லிய கருத்தை சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஜீரணித்துக் கொள்ளமுடியவில்லை.

இதன் காரணமாக ஐக்கிய மக்கள் சக்தியைச் சார்ந்த மனிஷா நாணயக்கார என்ற நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனுடைய உரை சிங்கள மக்களுக்கு எதிரானது என்ற தொனியில் அதனை விமர்சித்ததுடன் அவரது உரை ஹன்சாட்டில் இருந்து நீக்கப்படவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இலங்கையினுடைய வரலாறு என்று கூறப்படும் மகாவம்சத்தில் விஜயன் இந்தியாவில் இருந்து தனது 700 நண்பர்களுடன் இலங்கைக்கு வந்தார் என்று கூறப்படுகின்றது. இவ்வாறு அவன் இலங்கைக்கு வந்து குவேனி என்ற பெண்ணை மணந்தார் என்றும் கூறப்படுகின்றது.

விஜயன் இலங்கைக்கு வந்தபோது இலங்கையில் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், தொண்டீஸ்வரம் ஆகிய ஐந்து ஈஸ்வரங்கள் இலங்கையைச் சுற்றிலும் இருந்தன என்றும், இங்கிருந்தோர் சிவனை வழிபட்டு வந்தனர் என்றும், அவர்கள் பேசியது தொன்மையான மொழி தமிழ் எனவும் சிங்கள, தமிழ் மற்றும் சர்வதேச வரலாற்று ஆய்வாளர்கள் கூறியிருக்கின்றார்கள்.

இதனையேதான் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனும் தனது கன்னி உரையில் குறிப்பிட்டு அவ்வாறான தொன்மையான ஓர் மக்கள் இனத்துக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி இருந்தார். இது எந்த விதத்தில் ஓர் இனவாதக் கருத்தாக அமையும் என்பதைக் கற்றறிந்த சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனுடைய கருத்துக்களைப் பாரிய இனவாதக் கருத்துக்கள் என்றும், இவை அடக்கப்படவேண்டும் என்றும், இந்தக் கருத்துக்கள் தமிழீழக் கோரிக்கைக்கு ஒப்பானவை என்றும் பிரதமர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசுகின்றமையானது அவர்களின் உள்நோக்கத்தையே வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றிய போது இலங்கை முழுவதிலும் தமிழே நீதிமன்ற மொழியாக இருந்தது என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

தமிழ் மக்களினுடைய மொழி, அதனுடைய தொன்மை, அவர்களது கலாசாரம், பண்பாடு, அவர்களுக்கு உரித்தான அதிகாரங்கள், அவர்களுடைய பாதுகாப்பு இவை எதனைப் பற்றிப் பேசினாலும் ஒட்டுமொத்த சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இவை இனவாதக் கருத்துக்களாகவே தோன்றுகின்றன.

இன்னும் சொல்லப்போனால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது மொழிதொடர்பாகவோ, தமது பிறப்புரிமைகள் தொடர்பாகவோ, அவர்களது பாதுகாப்பு தொடர்பாகவோ பேசக்கூடாது என எதிர்பார்க்கின்றார்கள்.

அரசின் காணி அபகரிப்பு, எமது புராதன சின்னங்களை அழித்து ஒழித்தல், தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள மறுத்தல் போன்ற அனைத்தையும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள்.

தமிழ் இனத்துக்கு எதிரான இனப்படுகொலைகள், போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மானுடத்திற்கெதிரான குற்றங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்திலோ, வெளியிலோ தமிழர் தரப்புக்கள் பேசக் கூடாது என்று எதிர்பார்க்கின்றார்கள்.

இவ்வாறு பேசுவது எல்லாம் இனவாதக் கருத்துக்கள் என முத்திரை குத்த முயற்சிக்கின்றார்கள். நாடாளுமன்றத்தில் இருக்கக் கூடிய சிங்கள,பௌத்த இனவாத சக்திகளும் அரசும் இவ்வாறான முயற்சிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றார்கள்.



இவ்வாறான கருத்துக்களை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதனை தெளிவாக கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

விக்னேஸ்வரன் கூறிய கருத்துக்கள் தவறான கருத்துக்கள் என்று கருதினால் – அதில் எந்தவிதமான உண்மையும் இல்லை, அவை பாராதூரமான கருத்துக்கள் என்று கருதினால் – சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்மையான கருத்துக்களைக் கூறி தங்கள் கருத்து சரி என வாதிட வேண்டுமே தவிர, அவை எதனையும் கூறாமல் அவற்றை நாடாளுமன்றக் குறிப்பேட்டில் இருந்து எடுக்கும்படி வற்புறுத்துவதானது அவர்களது இயலாத் தன்மையை வெளிப்படுத்துகின்றது.

விக்னேஸ்வரனுடைய கருத்துக்களை சவாலுக்கு உட்படுத்துவதற்கோ அல்லது அது பொய்யானது என்றோ நிரூபிக்க முடியாத சூழ்நிலையில் சபாநாயகரைப் பயன்படுத்தி அவரது கருத்தை ஹன்சாட்டில் இருந்து அகற்ற முற்சிப்பது சரியான ஒரு செயற்பாடாகத் தோன்றவில்லை.

நாடாளுமன்றம் என்பது மக்கள் பிரதிநிதிகள் தங்களது மக்களின் குறைநிறைகளை, அது தொடர்பான சட்டங்களை பேசுவதற்கும் உருவாக்குவதற்குமான சபையாகவே உள்ளது. அதாவது மக்கள் தமது இறையாண்மையை தமது பிரதிநிதிகள் ஊடாக நாடாளுமன்றத்தில் செயற்படுத்துகின்றார்கள் என்பதே அதன் அர்த்தம் ஆகும்.

ஆகவே, அந்த வகையில் சிறுபான்மை தேசிய இனம் ஒன்றின் பிரதிநிதிகள் அத்தேசிய இனத்தினுடைய உரிமைகள் தொடர்பாகவும், அவர்களுடைய இருப்புக்கள் தொடர்பாகவும், அவர்களுடைய பாதுகாப்பு தொடர்பாகவும் நாடாளுமன்றத்தில் எடுத்துரைப்பதற்கு உரித்துடையவர்கள்.

விஜயன் இலங்கைக்கு வந்த போது இலங்கையில் திருக் கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், தொண்டீஸ்வரம் ஆகிய ஐந்து ஈஸ்வரங்கள் இலங்கையைச் சுற்றிலும் இருந்தன என்றும், இங்கிருந்தோர் சிவனை வழிபட்டு வந்தனர் என்றும், அவர்கள் பேசியது தொன்மையான மொழி தமிழ் எனவும் சிங்கள, தமிழ் மற்றும் சர்வதேச வரலாற்று ஆய்வாளர்கள் கூறியிருக்கின்றார்கள். இதனையேதான் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனும் தனது கன்னி உரையில் குறிப்பிட்டு அவ்வாறான தொன்மையான ஓர் மக்கள் இனத்துக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி இருந்தார்.

அதற்கான உரித்துக்கள் அனைத்தும் வரலாற்றுபூர்வமாக அவர்களுக்கு இருக்கிறது என்பதையும் பெரும்பான்மை இனத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பெரும்பான்மை இனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசும் புரிந்துகொள்ளவேண்டும்.

புதிய நாடாளுமன்றத்தில் வந்திருக்கக் கூடிய அரச தரப்பினரும் எதிர்த் தரப்பில் இருக்கக் கூடிய சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும் தம்மை சிங்கள, பௌத்த பெரும் தேசியவாதிகள் எனக் கருதிக் கொள்வதும், ஏனைய தேசிய இனங்கள் தங்களுக்கு அடிமையாக சேவை செய்ய வேண்டும் என்று கருதுவதும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாத ஒருநிலைப்பாடாகும்.

உண்மையான வரலாற்றைத் திரிபுபடுத்தி, அதனை மறைத்து, உண்மைக்கு எந்த விதத்திலும் தொடர்பற்ற கற்பனையில் தோற்றுவிக்கப்பட்ட வரலாற்றை பாடப்புத்தகங்களில் நுழைத்து, மக்களை திசைதிருப்பி விட்டவர்கள் இந்நாட்டில் தொடர்ந்தும் மாறிமாறி ஆட்சி செய்துவரும் சிங்கள, பௌத்த மேலாதிக்கவாத சக்திகளே அன்றி, தமிழ் மக்கள் அல்லர் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டின் உண்மையான வரலாற்றை மறைத்து, இந்த நாடு சிங்கள மக்களுக்கு மட்டுமே உரித்தானது என்று நிறுவ முற்படுவதுதான் இனப்பிரச்சினைக்கான ஆணிவேர். இதனைப் புரிந்துகொண்டு இனியாவது உண்மையான வரலாற்றை மக்களிடம் எடுத்துச்சென்று இதுவரை காலமும் தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்படுகின்ற அரச வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து அனைவரும் அவரவர் உரிமைகளுடன் வாழ வழிவகுக்க வேண்டும்.

எனவே, பலமொழிகள், பலமதங்கள், பல இனங்கள் இருக்கக் கூடிய ஒரு நாட்டில் சிங்கள பௌத்தர்கள் மாத்திரம்தான் தீர்மானிக்கும் சக்திகள் என கருதி ஏனையோரை அடக்கி ஒடுக்கும் கருத்துக்களை கைவிட்டு, இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை உருவாக்கக் கூடியவகையில் அரசும் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்வரவேண்டும் எனகேட்டுக் கொள்கின்றோம் – என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஏகாதிபத்திய ஆட்சி முறைக்கு நாம் ஒருபோதும் இடமளியோம்!

## பொன்சேகா எம்.பி. திட்டவட்டம்



கொழும்பு, ஓகஸ்ட் 24

புதிய அரசமைப்பின் மூலம் ஏகாதிபத்திய ஆட்சியை முன்னெடுக்க அரசு முயற்சிக்குமாயின் அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை. அரசியல்வாதிகள் ஊழல், மோசடிக்காரர்களாயின் எவ்வித அரசமைப்பு உருவாக்கப்பட்டாலும் அது பயனற்றதாகும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கம்பஹா பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

19 ஆவது அரசமைப்பு திருத்தத்தை முழுமையாக நீக்கப் போவதில்லை என்று அரச தரப்பு தெரிவித்துள்ளது. சுயாதீன ஆணைக்குழுக்கள் நீக்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின் அடிப்படையில் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டவர்கள் நாடாளுமன்றம் செல்ல முடியாது என்ற விடயம் உள்ளிட்ட சிலவற்றில் மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தனிப்பட்ட தேவைக்காகவே இவ்வாறான மாற்றங்களை முன்னெடுக்கின்றனர். 19ஆவது அரசமைப்பு திருத்தத்தில் சில சில குறைபாடுகள் காணப்பட்டன. அவை நாட்டின் எதிர்காலத்தில் பாரிய பாதகத்தை ஏற்படுத்தும் வகையிலான குறைபாடுகள் அல்ல. சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டிய சில விடயங்களில் குறைபாடுகள் காணப்பட்டன. அவற்றில் திருத்தங்களை மேற்கொள்வார்களாயின் அதற்கு நாமும் ஆதரவளிப்போம்.

ஆனால், தனியொரு பிரிவினருக்காக மாத்திரம் புதிய அரசமைப்பை உருவாக்க முயற்சிப்பார்களாயின் அதற்கு நாம் ஒருபோதும் ஆதரவளிக்கப் போவதில்லை. புதிய அரசமைப்பின் மூலம் ஏகாதிபத்திய ஆட்சியை முன்னெடுக்க முயன்றால் அதற்கு நாம் கடும் எதிர்ப்பை வெளியிடுவோம்.

உலகில் அரசமைப்பு அற்ற நாடுகளும் உள்ளன. இங்கிலாந்து அரசமைப்பற்ற நாடாகும். அந்நாட்டிலுள்ள அரசியல் தலைவர்கள் தூய்மையானவர்கள் என்பதாலும், அவர்கள் நாட்டை நேசிப்பவர்கள் என்பதாலும் அரசமைப்பின்றியே ஒழுக்கமான முறையில் அந் நாடுகள் முன்னோக்கிச் செல்கின்றன. எனவே, அரசமைப்பு இங்கு பிரச்சினையல்ல. அரசியல்வாதிகள் ஊழல், மோசடிக்காரர்களாயின் எவ்வித அரசமைப்பு உருவாக்கப்பட்டாலும் அது பயனற்றதாகும் – என்றார்.

# வாள்வெட்டுக் குழுக்களை உடன் கைது செய்யுங்கள்!

## கொல்லப்பட்ட மாணவனின் இறுதி ஊர்வலத்தில் ஆர்ப்பாட்டம்




மட்டக்களப்பு, ஓக 24

வாள்வெட்டுக் குழுக்களை இல்லாமல் செய்து பொதுமக்கள் அச்சமின்றி பாதுகாப்பாக வாழும் சூழலை உருவாக்குங்கள் என படுகொலை செய்யப்பட்ட மாணவனின் சடலத்தை வீதியில் வைத்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு கொம்மாதுறை பகுதியில் நேற்று முன்தினம் இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட வாள்வெட்டுச் சம்பவத்தில் 15 வயது மாணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான். மாணவனின் இறுதி ஊர்வலம் இன்று திங்கட்கிழமை நடைபெற்றது.

இதன்போது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் செங்கலடி – கொழும்பு மற்றும் பதுளை வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி கோட்டபாய வாள் வெட்டுக்குழுக்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ரவுடிகளிடம் இருக்கும் வாள்கள் அனைத்தையும் பறிமுதல் செய்ய வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசம் எழுப்பினர்.

# ஐ.தே.க. தலைவராக கரு ஜயசூரிய 'ரெடி'

கொழும்பு, ஓக 24

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்பதற்கு தான் தயார் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, ஐ.தே.கவின் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்று அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

பல தரப்புகள் விடுத்த வேண்டுகோளின் பிரகாரமே தான் இந்த முடிவை எடுத்தார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுத்தேர்தலில் ஏற்பட்ட படுதோல்வியின் பின்னர் ஐ.தே.கவின் தலைமைப் பதவியில் இருந்து விலகும் முடிவை ரணில் விக்கிரசிங்க எடுத்திருந்தார்.

இந்நிலையில் புதிய தலைவர் பதவிக்காக அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் எட்டு பேர் போட்டியிடுவதற்காக விருப்பத்தை வெளியிட்டிருந்தனர் என் பது குறிப்பிடத்தக்கது.

எனினும், கரு ஜயசூரிய தலைமைப் பதவியை ஏற்கும் பட்சத்தில் போட்டியி லிருந்து அவர்கள் விலகக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சிங்கராஜ வனப்பகுதியில் யோஷிதவுக்கு ஹோட்டல்?




கொழும்பு, ஓக 24

சிங்கராஜ வனப்பகுதியில் தனக்கு ஒரு ஹோட்டல் இருக்கின்றது என ஒரு சிலரால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை முற்றாக மறுத்துள்ளார் யோஷித ராஜபக்ஷ.

இது தொடர்பில் ஒரு சிலரால் வெளியிடப்பட்டுள்ள கருத்துகள் தொடர்பில், அதனை வெளியிட்ட நபர்களுக்கு எதிராக தனது சட்டத்தரணி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது ருவிட்டர் தளத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது புதல்வரும், கடற்படை அதிகாரியுமான லெப்டினன்ட் கொமாண்டர் யோஷித ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் 19ஆம் திகதி நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், காணி மற்றும் விவசாய மறுசீரமைப்பு தொடர்பான அமைப்பின், சுற்றாடல் மற்றும் சட்ட அதிகாரியான சஞ்சீவ சமிக்கரவினால் தெரிவிக்கப்பட்டது என வெளியி டப்பட்டுள்ள குறித்த கருத்துக்கு எதிராகவே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் குறித்த கருத்தை வெளியிட்ட நபருக்கு எதிராக தனது சட்டத்தரணி மூலம் அனுப்பப்பட்ட அவதூறுக் கடிதத்தையும் அவர் வெளியிட்டுள்ளார்.

அக்கடிதத்தில், குறித்த நபரை பகிரங்கமாக மன்னிப்புக் கோருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சஞ்சீவ சமிக்கர பின்வருமாறு கருத்து வெளியிட்டுள்ளார் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில், லங்காகம மற்றும் அதனை அண்டி வாழும் மக்களுக்கு போக்குவரத்து வசதி செய்வதாக தெரி வித்து, சிங்கராஜ வனப் பகுதியில், பாரிய சட்ட விதிமீறல் நடவடிக்கையாக காடழிக்கப்பட்டு வருகின்றது. இதன் பின்புலத்தில் பாரிய முதலீட்டு நடவடிக்கைகள் காணப்படுவதோடு, யோஷித ராஜபக்ஷவுக்குச் சொந்தமான ஹோட்டலொன்றும் அங்கு காணப்படுவதை நாம் அறிவோம் என்றுள்ளது.

# மூன்று வாகனங்கள் மோதுண்டு சிறுமியும் தந்தையும் உயிரிழப்பு!

கொழும்பு, ஓக 24

கண்டி – குருணாகல் பிரதான வீதியின் கொஸ்கொட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொள்கலன் லொறியொன்றுடன் மோதிய கார் பின்னர் மேலும் ஒரு கார் மீது கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது இரு கார்களில் பயணித்த ஐவர் உட்பட லொறியின் சாரதியும் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் கலகெதர மற்றும் பேராதனை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

அங்கு இரண்டு வயதுச் சிறுமியும் அவரது தந்தையும் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் கூறினர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் நிலம்பா பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய தந்தை மற்றும் 2 வயதுச் சிறுமி என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் காயமடைந்த ஏனையவர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# மைத்திரி உப பிரதமரா? அப்படி எதுவும் இல்லை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



கொழும்பு, ஓக 24

முன்மொழியப்பட்ட புதிய அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உப பிரதமர் பதவியை வழங்குவது தொடர்பில் இதுவரையில் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படவில்லை.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளரும் கல்வி அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பு, நெலும் மாவத்தையில் அமைந்துள்ள கட்சிக் காரியாலயத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது, அமைச்சர் பீரிஸிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆயினும், அவசியம் ஏற்படும் பட்சத்தில் அவ்வாறான வாய்ப்புகள் காணப் படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் நிறுவப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் போன்ற அரசியல் மயமாக்கப்பட்ட நிறுவனங்கள் புதிய அரசமைப்பு திருத்தத்தில் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தேசியப் பட்டியல் நாடாளுமன்றத் தெரிவு தயாசிறியின் விசனம் தேவையற்ற ஒன்று!

கொழும்பு, ஓக.25

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தேசிய பட்டியலில் தான் நியமிக்கப்பட்டமை தொடர்பாகக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜெயசேகர விசனமடைகின்றமை தேவையற்றது என நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேசியப் பட்டியலில் தெரிவுசெய்யுமாறு தான் யாருக்கும் அழுத்தம் பிரயோகிக்கவில்லை எனவும் பொதுஜன பெரமுனவின் உயர்மட்ட குழுவே தன்னை தேசிய பட்டியல் உறுப்பினராகத் தெரிவு செய்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தேசிய பட்டியல் பரிந்துரையில் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாசவின் பெயரைப் புறக்கணித்து, சுரேன் ராக வன் தெரிவு செய்யப்பட்டமை கட்சிக்குள் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் பேராசிரியர் ஜீ.எல்.பிரீஸ் உள்ளிட்ட ஐவர் அடங்கிய குழுவே தேசிய பட்டியல் உறுப்பினர்களைத் தெரிவு செய்தது.




இதன்போது, 29 தேசியப் பட்டியல் ஆசனங்களில் சுதந்திரக் கட்சியில் இருந்து மூவரின் பெயர்கள் பொதுஜன பெரமுனவிடம் வழங்கப்பட்டிருந்தன. அதில் ஆரம்பத்திலிலேயே ஒருவரது பெயர் பொதுஜன பெரமுனவால் நீக்கப்பட்டது.

இந்நிலையில், தேர்தல் முடிவுகள் வெளியானதன் பின்னர் பொதுஜன பெரமுனவிற்கு 17 தேசியப் பட்டியல் ஆசனங்களே கிடைத்தன. அதற்கமைய அந்தக்கட்சி சுதந்திரக் கட்சியால் பரிந்துரைக்கப்பட்டிருந்த இருவரில் ஒருவரை மாத்திரமே தெரிவு செய்தது.

அந்த ஒரு தெரிவாக நான் தெரிவு செய்யப்பட்டேன். அதனைத் தொடர்ந்து பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாச சில சந்தர்ப்பங்களில் இது தொடர்பான தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

இந்நிலையில் கடந்த 20 ஆம் திகதி முதலாவது நாடாளுமன்ற அமர்வு நிறைவடைந்தவுடன் அன்றைய தினம் மாலை சுதந்திரக் கட்சியின் செயற்குழு, மத்திய குழு மற்றும் அரசியல் குழு என்பன கூடியபோது கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன, தேசியப் பட் டியல் ஆசனத்தில் சுரேன் ராகவன் தெரிவுசெய்யப்பட்டமை தொடர்பாக அநாவசியமான கருத்துக்களை வெளியிடுகின்றமை பிரயோசனமற்றது எனக் கூறியிருந்தார். இவ்வாறு மைத்திரிபால சிறிசேன கூறிய விடயமே எனது நிலைப்பாடாக இருக்கின்றது.

உண்மையில் கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினர்கள் யார் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் கட்சியின் செயலாளருக்கே காணப்படுகிறது. என்றாலும் பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்தில் சுதந்திரக் கட்சியும் இணைந்து தேர்தலில் போட்டியிட்டமையால் இறுதி தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அந்தக் கட்சியின் உயர்மட்டக் குழுவிற்கே உள்ளது. அதற்கமைய அவர்கள் என்னைத் தெரிவு செய்துள்ளார்கள்.

இந்நிலையில், உத்தியோகபூர்வமாக நடந்து முடிந்த ஒரு விடயம் பற்றி தனிப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றமையால் எவ்வித பிரயோசனமும் இல்லை என்று குறிப்பிட்டார்.

## ரஞ்சனுக்கு எதிராக வழக்கு: நாளை மீண்டும் விசாரணை

### பிரதிவாதி சார்பில் சுமந்திரன் வாய்மூல சமர்ப்பணம்

கொழும்பு, ஓக. 25

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டின் வாய்மூல சமர்ப்ப ணம் நேற்று உயர்நீதிமன்றத்தில் மீண்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, சிசிர டி அப்ரு, விஜித் மலல்கொட மற்றும் ப்ரீதி பத்மன் சூரசேன ஆகிய மூவர் அடங்கிய நீதிபதிகள் முன்னிலையில் குறித்த வாய்மூல சமர்ப்பணம் முன்வைக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் பிரதிவாதியான ரஞ்சன் ராமநாயக்க சார்பில், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் வாய்மூல சமர்ப்பணங்களை முன்வைத்துள்ளார்.

இதன்படி, நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக வழங்கப்பட வேண்டிய தண்டனை குறித்து, நாடாளுமன்றத்தால் உரிய சட்டமொன்று வகுக்கப்படவில்லை என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் மன்றுக்கு அறிவித்துள்ளார்.

அத்துடன், இது தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயர்நீதிமன்றத்துக்கு அல்லது உயர் நீதிமன்றத்தின் நீதிபதியொருவருக்கு நேரடியாக அவமதிப்பை ஏற்படுத்தியிருந்தால் மாத்திரமே, இது தொடர்பான வழக்கை உயர் நீதிமன்றத்தில் விசாரிக்க முடியும் எனவும் ஜனாதிபதி சட்டத் தரணி எம்.ஏ சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, பிரதிவாதியான ரஞ்சன் ராமநாயக்கவின் சர்ச்சைக்குள்ளான கருத்தில், உயர்நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகள் குறித்து எந்தவொரு விடயங்களும் உள்ளடக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில், குறித்த முறைப் பாட்டை உயர்நீதிமன்றத்தில் விசார ணைக்கு எடுத்துக்கொள்ள, நீதிமன்ற அதிகாரம் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவின் கருத்தின் மூலம் அப்போதைய நீதியமைச்சரின் செயற்பாடுகள் மாத்திரமே விமர்சிக்கப்பட்டுள்ளதே தவிர, நீதிபதியை விமர் சிப்பது அவரின் நோக்கமாக இருக்கவில்லை எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, பிரதிவாதியான ரஞ்சன் ராமநாயக்க மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை எந்தவகையிலும் உறுதிப்படுத்த முடியாது எனவும், இதனால் குறித்த குற்றச்சாட்டிலிருந்து அவரை விடுவிக்குமாறும் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ சுமந்திரன் தனது வாய்மூல சமர்ப்பணத்தின் நிறைவில் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனையடுத்து, மேலதிக விசாரணைகளுக்காக நீதிமன்றம் நாளை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாளைய தினம் சட்டமா அதிபர் சார்பில், மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சரத் ஜயமாந்த, இது தொடர்பான சமர்ப்பணங்களை முன்வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில் இளம் பெண் கொலை கைதான இருவரும் விளக்கமறியலில்!

மன்னார் உப்பளம் பகுதியில் கடந்த 13 ஆம் திகதி பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்ட நிலையில் மன்னார் பொலிஸாரின் புலன் விசாரணைக்கு அமைவாகக் கைது செய்யப்பட்ட இரண்டு பெண்கள் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை ) மாலை மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர். அதன்போது, அந்த இரு பெண்களையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

மன்னார் உப்பளம் பகுதியில் கடந்த 13 ஆம் திகதி மதியம் சடலமாக மீட்கப்பட்ட யுவதியின் கொலை தொடர்பாக பல்வேறு தகவல்கள் வெளிவந்த நிலையில் கடந்த சில நாள்களுக்கு முன் குறித்த யுவதியுடன் மன்னார் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட கொலை செய்யப்பட்ட பெண்ணின் சகோதரி உட்பட இரண்டு பெண்கள் அடையாளம் காணப்பட்டு மேற்படி சந்தேக நபர்கள் மன்னார் பொலிஸாரின் விசாரணைகளுக்கு அமைவாக கைது செய்யப்பட்டனர்.

அந்த இரண்டு சந்தேக நபர்களும் விசாரனைகளின் பின்னர் நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) மாலை 7 மணியளவில் மன்னார் பொலிஸாரால் மன்னார் நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன் போது கைது செய்யப்பட்ட இரு பெண்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி மேற்படி கொலைக்கும், இரு பெண்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை எனவும், வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு என அந்தப் பெண்ணின் தாய் மாமனிடம் பெண்ணை ஒப்படைத்து விட்டு இரு பெண்களும் சென்றனர் எனவும், இந்தக் கொலைக்கும் கைது செய்யப்பட்டுள்ள இரு பெண்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனத் தெரிவித்திருந்தார்.

எனினும், பாதிக்கப்பட்ட யுவதி சார்பாக மன்றில் முன்னிலையான சட்டத்தரணி சர்மிலன் டயஸ், மேற்படி யுவதியின் கொலை திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட கொலை எனவும், இறந்த பெண்ணின் குடும்ப உற வினர்கள் மத்தியில் காணப்பட்ட முரண்பாடுகள் காரணமாகவே இக் கொலை இடம் பெற்றதாகவும், அவ் இரு பெண்களும் பொலிஸாரால் மேற்கொண்ட விசாரணை யின் போது தாங்கள் கொலை செய்தமையை ஒப்புக் கொண்டுள்ளனர் எனவும், எனவே இக் கொலையின் பிரதான சந்தேக நபரான அந்தப் பெண்ணின் தாய் மாமனைக் கைது செய்வதற்கான அறிவுறுத்தலை பொலிஸாருக்கு வழங்குவதுடன் மேற்படி இரு பெண் களையும் விளக்கமறியலில் வைத்து விசாரிக்க வேண் டும் எனவும் நீதிமன்றில் தெரிவித்தார்.

இரு தரப்பு வாத பிரதி வாதங்களின் பின்னர் பிரதான சந்தேக நபரான செட்டிகுளத்தைச் சேர்ந்த பெண்ணின் தாய் மாமன் இதுவரை கைது செய்யப்படாதமையால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதி மன்றத்தில் அவரை ஆஜர் படுத்துமாறும், அந்த இரு பெண்களையும்எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறும் மன்னார் நீதிவான் மாணிக்கவாசகர் கணேச ராஜா உத்தரவிட்டார்.

## திருமலை இறக்கக்கண்டி கடல் பகுதியில் சட்டவிரோத மீன்பிடி உபகரணங்கள் மீட்பு

திருகோணமலை இறக்கக்கண்டி கடல் பகுதியில் மிதந்து கொண்டிருந்த – சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவதாக நம்பப்படும் – பல வெடி பொருள்கள் கடற்படை மேற்கொண்டுள்ள நடவடிக்கையின் போது மீட்கப்பட்டன.

கிழக்குக் கட்டளைப் பீடக் கடற்படையினர் திருகோணமலை இறக்கக்கண்டி மற் றும் புறாத்தீவுக்கு அருகே நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது கடலில் மிதந்து கொண்டிருந்த பல வெடிபொருள்களைக் கைப்பற்றினர்.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 16 வாட்டர் ஜெல் குச்சிகள், 08 மின்சாரம் அல் லாத டெட்டனேட்டர்கள் மற்றும் 4, 8 மற்றும் 10 அங்குலங்கள் கொண்ட 07 பாது காப்பு உருகி பிரிவுகளும், தலா 5 அடி நீளமுள்ள ஒரு பாதுகாப்பு உருகலும் கடற்படை வெடிகுண்டு அகற்றும் குழுவால் பாது காப்புக்காக செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மீன்பிடித் தொழிலில் வெடிபொருள் களைப் பயன்படுத்துவதால் மீனவர்களுக்கும் கடல் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க கடற்படை தொடர்ந்து இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## வரவு – செலவுத் திட்டத்தில் நிவாரணம் வழங்கப்படும்!

### நிதி இராஜாங்க அமைச்சர் உறுதி

கொழும்பு, ஓக. 25

வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய வழிமுறைகள் அறிமுகப்படுத்துவது அவசியம் என்று நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

நாட்டின் பாரம்பரிய கைத்தொழில் உற்பத்திகளுக்கு அதிகபட்ச கேள்வியை ஏற்படுத்துவது அரசின் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளூர் உற்பத்தி மற்றும் கைத்தொழில் துறைக்கு முன்னுரிமை வழங்கப்படும் என் றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

முதலீடுகளை வலுப்படுத்தக்கூடிய பொறிமுறையொன்றைத் தயாரித்து தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டுவதற்கான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும்.

அந்நியச் செலாவணியை அதிகரிப்பதற்கு உள்ளூர் உற்பத்திகளின் ஏற்றுமதிக்கு அரசு முன்னுரிமை வழங்கியுள்ளது – என்றார்.

# கிளிநொச்சி அபிவிருத்திக் குழு தொடர்பான முன்னாயத்தக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கான ஒருங்கிணைப்பு குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கிணங்க கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரின்தலைமையில்மாவட்டஒருங்கிணைப்பு குழு கூட்டம் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் நேற்றைய தினம் மாவட்ட செயலகத்தில்இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களின் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ,பிரதேச செயலகங்களின் செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது நிர்வாக கட்டமைப்புடன் தொடர்புடைய விடயங்கள்,சமூக அபிவிருத்தி, சமூக நலன் சார்ந்த விடயங்கள் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், சுற்றுலாத்துறை அபிவிருத்தி,வாழ்வாதார அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

# அரசியல்வாதியின் மகன் உட்பட எழுவர் போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது

பதுளை பகுதியை சேர்ந்த அரசியல்வாதி ஒருவரது புதல்வன் உள்ளிட்ட ஏழு இளைஞர்கள் போதைப்பொருள் தொடர்பான குற்றச் சாட்டின் பேரில், பதுளை போதைவஸ்து குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதுளை போதை வஸ்து குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றினையடுத்து, விரைந்த பொலிஸ் பிரிவினர் இந்த ஏழு இளைஞர்களையும், போதைவஸ்து பைக்கட்டுக்களுடன் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், பதுளைப் பகுதியின் அரசியல்வாதியொருவரது புதல்வனும் கைது செய்யப்பட்டவர்களில் அடங்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் நீண்ட காலமாக போதைவஸ்து விற்பனை தொடர்பான செயற்பாடுகளில் இறங்கியுள்ளரென்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்திருப்பதாக, குறிப்பிட்ட பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் அசங்க குணரட்ன தெரிவித்தார்.

# சிறை விடயத்தில் பிற படைகளை நேரில் களத்தில் இறக்கியமை ஏன்?

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விளக்கம்



அரச புலனாய்வுப் பிரிவு, இராணுவம், பொலிஸ் புலனாய்வுப்பிரிவு, விசேட அதிரடிப்படை என்பவற்றுடன் சிறைச்சாலையையும் ஒன்றிணைத்து நுட்பமாகச் செயற்பட்டமையால் சோமாலியாவைப் போன்ற ஒரு நிலைமை நாட்டில் ஏற்படாமல் தடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் பெரிய சிறைச்சாலையாகக் கருதப்படும் வெலிக்கடை சிறைச்சாலை மற்றும் மெகசின் சிறைச்சாலை, ரிமாண்ட் சிறைச்சாலை உள்ளிட்டவற்றில் தினமும் கைதொலைபேசிகளும் போதைப் பொருள் பொட்டலங்களும் சிம் அட்டைகளும் கைப்பற்றப்படுகின்ற பின்னணியிலேயே பொலிஸ் அதிரடிப் படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர் என அவர் கூறினார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், பாதாள உலக செயற்பாடுகள், போதைப் பொருள் பாவனை மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்கள் போன்றவற்றை முற்றாக ஒழிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இலங்கை இதற்கு முன்னர் சென்ற போக்கிலேயே எதிர்வரும் 4 முதல் 5 வருடங்களும் பயணித்திருக்குமாயின் யாருக்கும் வீதியில் சுதந்திரமாக செல்லக் கூடிய சூழல் இருந்திருக்காது என்றும் கமல் குணரத்ன சுட்டிக்காட்டினார்.

எனவே சோமாலியாவைப் போன்ற ஒரு நாடக மாறவிருந்த சந்தர்ப்பத்தில் முறையான வேலைத் திட்டங்களை முன்னெடுத்தன் மூலம் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் தடுத்திருக்கின்றோம் என்றார் அவர்.

# மட்டக்களப்பில் வறட்சி மக்கள் கடும் பாதிப்பு!

மட்டக்களப்பு, ஓக.25

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது கடும் வெயிலுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்றது. இதனால் மாவட்டத்தின் படுவாங்கரைப் பகுதியில் அமைந்துள்ள பெரும்பாலான கிராமங்களில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக நீர்த் தாங்கிகள் மூலம் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனாலும் அவ்வாறு வழங்கப்படும் குடி தண்ணீர் தமக்குப் போதுமானதாக இல்லை எனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் மனிதர்களுக்கு மாத்திரமின்றி குடி தண்ணீருக்காகக் கால்நடைகளும் அலைந்து திரிவதையும் அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வேளாண்மைச் செய்கைக்கு நீர் வழங்குகின்ற பிரதான குளங்களின் நீர்மட்டமும் குறைந்துள்ளன. இவற்றைவிட பொறுகாமம், கோவில் போரதீவு, பெரியபோரதீவு, வெல்லாவெளி, பழுகாமம் மற்றும் களுதாவளை, களுவாஞ்சிக்குடி, மகிளூர் போன்ற பல பகுதிகளில் அமைந்துள் சிறிய குளங்கள் அனைத்தும் முற்றாக வற்றியுள்ளன.

இவற்றால் கிராமங்களிலுள்ள கிணறுகளும் வற்றிப் போயுள்ளன. மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நீருக்காகக் காலையில் எழுந்தவுடன் அலைந்து திரியவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த இந்த நிலைமை இக்காலப்பகுதியில் மாத்திரமின்றி வருடாந்தம் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பகுதியில் ஏற்பட்டு வருகின்றதானது தொடர்கதையாகவே உள்ளது.

இது இவ்வாறு இருக்க, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் கலாமதி பத்மராஜாவின் பணிப்புரைக்கு அமைய அனர்த்த நிவாரண சேவைப் பிரிவால் மாவட்டத்தில் வறட்சிப் பாதிப்புக்குள்ளான 8 பிரதேச செயலகங்களில், அவ்வவ் பிரதேச செயலாளர்கள் ஊடாக அப்பகுதியிலுள்ள பிரதேச சபைகளினால், பவுஸர்கள் மூலம் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களை அடையாளம் கண்டு கிராமங்களில் நீர் தாங்கிகள் வைத்து குடி தண்ணீர் வழங்கும் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக வேண்டி 55 லட்சம் ரூபா நிதியும் விடுவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் மாவட்டத் தில் 23 ஆயிரத்து 335 குடும்பங்களைச் சேர்ந்த 64 ஆயிரத்து 761 பேர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், ஏற்கனவே வறட்சியால் பாதிக்கப்படும், பிரதேச சபைகளுக்கு 5 பெரிய பவுஸர்கள், 17 உழவு இயந்திரத்தைக் கொண்டு பயன்ப டுத்தும் பவுஸர்கள் என்பனவும் பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள அனர்த்த நிவாரண சேவைப் பிரிவினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன எனவும் மாவட்ட செயலகத்தின் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் ஆர்.சிவநாதன் தெரிவித்தார்.

# சீனக்குடாவில் ரயில் மீது கல்வீச்சு ரயில் சாரதி காயம்; 4 பேர் சிக்கினர்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை சீனக்குடா பகுதியில் ரயில் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் பேரில் நான்கு சந்தேக நபர்களைத் தாங்கள் கைதுசெய்துள்ளனர் என சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையிலிருந்து கலாவெவ பகுதிக்கு சென்றுகொண்டிருந்த ரயில் மீது சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தீவரகம பகுதியில் கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது ரயில் சாரதியின் உதவியாளர் கல் வீச்சுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து கல்வீச்சு நடத்திய சந்தேகநபர்கள் 4 பேரையும் கைது செய்துள்ளனர் என சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர். சீனக்குடா, தீவரகம பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய இருவரும், 15 வயதுடைய ஒருவரும், பதிமூன்று வயது உடைய ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 13 வயதுடைய சிறுவனுக்கு எதிராக ஏற்கனவே நான்கு முறைப்பாடுகள் சீனக்குடா பொலிஸ் நிலையத்தில் பதியப்பட்டுள்ளன எனவும் சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 4 பேரையும் இன்று திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேல் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் சீனக்குடாப் பொலிஸார் தெரிவித்தனர்.

# சிறுவன் மீது பாலியல் துஷ்பிரயோகம் புரிந்த நடன ஆசிரியர் ஒருவர் கைது

சிறுவன் ஒருவனைத் துஷ்பிரயோகப்படுத்திய நடன ஆசிரியர் ஒருவர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர், பேராசிரியர் முதித விதான பத்திரண இத்தகவலை வெளியிட்டார்.

அதிகார சபைக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய இந்த ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளளார்.

இந்த ஆசிரியரின் நடத்தையால் சிறுவன் கடுமையாக மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், ஓர் அரங்கத்தில் நடந்த முகமூடி நிகழ்வுக்கான பயிற்சியின்போது, இந்தச் சிறுவனை இரவு உணவை எடுத்துவர தனது காரில் அவர் அழைத்துச் சென்றமை தெரியவந்தது. அந்தச் சமயத்தில் அந்தச் சிறுவனுக்கு போதைப் பொருள் அடங்கிய பானத்தைக் குடிக்கக் கொடுத்து அவனைக் கடுமையாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியமை தெரியவந்தது.

இந்த சம்பவத்திற்கு முன்னர், அந்த நடன ஆசிரியர் வயது குறைந்த 3 சிறுவர்கள் உட்பட 11 பேர் அடங்கிய குழுவை வெளிநாடு ஒன்றுக்கு அழைத்துச் சென்றிருந்தார்.

இந்த விஜயத்தின் போதும் வயது குறைந்த ஒரு சிறுவனைத் துஷ்பிரயோகம் செய்யவர் முயன்றார் எனவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அத்துடன் குறைந்த வயது சிறுவர்கள இருவரைப் பயன்படுத்தி இணையம் மூலம் சிறுமி ஒருவரைத் துன்புறுத்துவதற்கும. அவர் முயன்றார் எனவும் தெரிய வந்துள்ளதாம்.

# சம்பந்தன், விக்கி, ஹக்கீம், ரிஷாத்தை தோற்கடிக்க அங்கஜனுக்கும், அதாவுல்லாவுக்கும் அமைச்சர் பதவி

## இப்படி அரசுக்கு ஆலோசனை கூறுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஓக.25

அங்கஜனுக்கு அமைச்சுப்பதவியை வழங்கி அவரைப்பலப்படுத்தினால் சம்பந்தன், விக்னேஸ்வரன் போன்றவர்களின் அரசியல் பயணத்தை தோற்கடிக்க கூடியதாக இருக்கும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், அமைச்சருமான விமல்வீரவன்ஸ ஆலோசனை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கொழும்பில் வாழ்ந்து, றோயல் கல்லூரியில் பயின்று, பிள்ளைகளை சிங்களவர்களுக்கு மணம் முடித்துவைத்த விக்னேஸ்வரன், பூர்வீகம் பற்றியும், பூர்வீக மொழி குறித்தும் கதைக்கின்றார். இவ்விடயங்களில் அவருக்கு அந்தளவுக்கு பற்று இருக்குமானால் எதற்காக பிள்ளைகளை சிங்களவர்களுக்கு திருமணம்முடித்துவைக்கவேண்டும்? எனவே, இவையெல்லாம் பொய் நாடகம் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.



சம்பந்தனை விடவும் தான்தான் தமிழ் தேசியவாதி, வீரன் என்பதை காட்டிக்கொள்வதற்கான முயற்சியிலேயே விக்னேஸ்வரன் இறங்கியுள்ளார். அதற்காகவே அடிப்படை வாதத்தைக் கையில் எடுத்துள்ளார். உலகில் பழமையான மொழி தமிழ் என்றெல்லாம் கூறினால் இலகுவில் மக்களை கவர்ந்துவிடலாம் என எண்ணியே அவ்வாறு உரையாற்றியுள்ளார்.

வடக்கு மக்கள் இன்று பிரிவினைவாதத்தை நிராகரித்துள்ளனர். 16 ஆக இருந்த கூட்டமைப்பின் எம்.பிக்கள் எண்ணிக்கை 10 ஆக குறைவடைந்துள்ளது. யாழ்.மாவட்டத்திலிருந்து சுதந்திரக்கட்சி ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவாகியுள்ளார். அதேபோல் ஹக்கீம் போன்றவர்களின் அழுத்தம், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அதாவுல்லா வெற்றிபெற்றுள்ளார். இதன்மூலம் தமிழ், முஸ்லிம் மக்கள் பிரிவினைவாதத்தையும், அடிப்படைவாதத்தையும் நிராகரிக்கின்றமை புலனாகின்றது.

எனவே, அங்கஜனுக்கும், அதாவுல்லாவுக்கும் அமைச்சுப்பதவிகளை வழங்க வேண்டும். நடுநிலையாக செயற்படக்கூடிய அரசியல்வாதிகளை நாம் பலப்படுத்தவேண்டும். அப்போதுதான் சம்பந்தன், விக்னேஸ்வரன், ஹக்கீம், ரிஷாத் போன்றவர்களின் இனவாத, அடிப்படைவாத அரசியலை தோற்கடிக்கக்கூடியதாக இருக்கும். - என்றார்.

# திலகர் மீது கை வைக்க அஞ்சுகின்றாராம் திகா!

## ஞாயிறு கூட்டத்தில் 'கப்சிப்'!!



தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் நிர்வாகக்குழு அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தலைமையில் நேற்று முன்தினம் கூடியதுடன், பல முக்கியமான தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

நிர்வாகக் குழுவுக்குள் இரண்டு பேர் புதிதாக உள்வாங்கப்பட்டுள்ளனர். அத்துடன், தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் தொழிலாளர் தேசிய முன்னணியின் பேராளர் மாநாடு தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

பேராளர் மாநாட்டில் கட்சியின் உயர் பதவிகள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்க ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டது.

இங்கு கருத்து வெளியிட்டிருந்த பழனி திகாம்பரம் -

தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் அதன் அரசியல் பிரிவு என்பன ஒரு ஜனநாயக பண்பை பேணும் கட்டமைப்பாகும். அனைவருக்கும் இங்கு சுதந்திரமாகக் கருத்துகளை வெளியிட முடியும்.

எமது பேராளர் மாநாட்டில் கட்சியின் தலைவர் பதவி, பொதுச் செயலாளர் பதவி, தேசிய அமைப்பாளர் பதவி, நிதிச் செயலாளர் பதவி மற்றும் கட்சியின் ஏனைய உயர் பதவிகளுக்கு நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எவர் வேண்டுமானாலும் போட்டியிடலாம். பேராளர் மாநாட்டில் பதவிகள் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும். - எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொழிலாளர் தேசிய முன்னணியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து திலகரை நீக்குவது பற்றியோ அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது சம்பந்தமாகவோ விரிவாக ஆராயப்படவில்லை எனவும், பேராளர் மாநாட்டை கூட்டி பொதுச்செயலாளரை தெரிவு செய்யும் வரையில் புதியவர் நியமிக்கப்படமாட்டார் எனவும் கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

# ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டு: கிளிநொச்சி மாணவர் நால்வருக்கும் பிணை

ஹெரோயின் போதைப்பொருளை நுகர முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நான்கு மாணவர்களையும் பிணையில் விடுவிக்க கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

கிளிநொச்சி பாடசாலை ஒன்றில் உயர் தரத்தில் கணித, உயிரியல் பிரிவுகளில் கல்வி பயிலும் மாணவர்கள் நால்வர், கிளிநொச்சியிலுள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றின் வளாகத்தில் வைத்து பொலிஸாரால் இன்று கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து தலா ஒரு முள்ளு (தீக்குச்சி யின் அளவு) ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

நான்கு மாணவர்களிடமும் வாக்குமூலம் பெறப்பட்டது.

"எமது சக மாணவர் ஒருவர் நான்கு முள்ளு ஹெரோயின் போதைப்பொருளை கடந்த சில நாள்களுக்கு முன்பு எமக்கு வழங்கியிருந்தார். அவர் தற்போது வேறு பிரதேசத்துக்குச் சென்றுவிட்டார்.

"சனிக்கிழமை தனியார் வகுப்பை முடித்துவிட்டு அந்த போதைப்பொருளை நுகர்ந்து கெத்துக் காட்டவேண்டும் என்று நினைத்தோம். அதனை சில மாணவர்களுக்குத் தெரிவித்துவிட்டு ஆரம்ப பாடசாலை ஒன்றின் மலசலகூடத்துக்குச் சென்றிருந்த போது, பொலிஸார் அங்கு வந்து கைது செய்தனர்." - என்ற சாரப்பட மாணவர்கள் நால்வரும் வாக்குமூலமளித்தனர்.

இந்த நிலையில் மாணவர்கள் நான்கு பேரும் கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான், இன்று விடுமுறை நாள் என்பதால் மாணவர்களை தலா ஒரு லட்சம் ரூபாய் ஆள் பிணையில் விடுவித்து உத்தரவிட்டார்.

"கிளிநொச்சி கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருள்களை பெருமளவில் பிடிக்கின்றோம். நேற்றுக் கூட 57 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் ஒருவரைக் கைது செய்தோம். எனினும் அவ்வாறான செய்திகள் ஊடகங்களில் வருவதில்லை.

"ஆனால் மாணவர்கள் கைது விடயம் பெரிதாக வெளியிடப்பட்டுள்ளது. இது பழி வாங்கும் செயற்பாடாக உள்ளது என சந்தேகிக்கவேண்டி உள்ளது. கைது செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் கல்வியில் சிறந்து விளங்குபவர்கள்.

"இந்தச் செய்தியை பெரிதாக வெளியிட்ட பத்திரிகையில் மாணவர்களில் ஒருவரின் தாயார் முன்னர் பணியாற்றியுள்ளார். எனவே இந்தப் பின்னணி பற்றியும் சந்தேகிக்கப்படுகிறது.

"அத்தோடு மாணவர்களிடம் கெத்து காட்ட வேண்டும் என்ற நோக்கம் இருப்பது விசாரணைகளில் வெளிப்பட்டது.

"மாணவர்கள் இவ்வாறான பிழையான வழிகளுக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு பொலிஸார் அனுமதிக்கமாட்டார்."- என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

## ராஜித மற்றும் ஹேஷ விதானகே ஆகியோருக்கு அழைப்பாணை!

அரசியல் பழிவாங்கல் சம்பவங்கள் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷ விதானகே ஆகியோருக்கு அழைப்பாணை விடுத்துள்ளது.

அதன்படி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 03 ஆம் திகதி இருவரையும் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கடந்த வெள்ளிக்கிழமை அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுவில் ஆஜரானார்.

ஜுன் மாதத்தில், அவன்காட் நிறுவனத்தின் தலைவர் நிசங்க சேனாதிபதி வழங்கிய முறைப்பாடு தொடர்பான விசாரணைக்காகவே ராஜித சேனாரத்ன ஆஜராகியிருந்தார்.

கடந்த ஆட்சியின் போது அரசியல் பழிவாங்கல் குற்றச்சாட்டுகள், நீதித்துறை மற்றும் பொலிஸார் மீதான தலையீடு போன்ற குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த வருடம் ஜனவரியில் மாதத்தில் உயர் அதிகாரமுள்ள ஜனாதிபதி அணைக்குழுக்களை நியமித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உயர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றுகளுக்கு 20 ஆவது திருத்தம் மூலம் மேலும் நீதியரசர்கள்

புதிய அரசமைப்பு திருத்தத்தில் உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அதிக நீதியரசர்களை நியமிப்பதற்கான திட்டங்களும் இருக்கும் என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஹலி - எல பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், இந்த நடவடிக்கையின் நோக்கம் தாமதப்படுத்தப்பட்டுள்ள நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதே என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அமைச்சரவை உபகுழு,19 ஆவது திருத்தம் குறித்து விரிவான கலந்துரையாடல்களை நடத்திய பின்னர் அமைச்சரவைக்கு அறிக்கை அளிக்கும், இதனை ஆராய்ந்து எந்தப் பிரிவுகளை வைத்துக் கொள்ள வேண்டும் அல்லது திருத்த வேண்டும் என்பது குறித்து கவனம் செலுத்தப்படும் எனக் கூறினார்.

நீதிச் சேவை ஆணைக்குழு மற்றும் வாக்காளர்களுக்கு மக்கள் பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பான விடயங்களும் இந்த திட்டங்களில் அடங்கும் என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் முடிவுகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்ய ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும் என்று நீதித்துறை துறையில் உள்ளவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே புதிய அரசமைப்பு திருத்தத்தில் இந்த விவகாரம் கவனத்தில் கொள்ளப்படும் அதேநேரம் பொறுப்புள்ள மக்கள் பிரதிநிதிகளை வாக்காளர்கள் தேர்ந்தெடுப்பதற்காக, புதிய தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்படுவதும் அரசமைப்பு திருத்தத்தில் முன்னுரிமை அளிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இனவாதக் கருத்துக்களால் சபையை அலங்கரிக்க முற்படும் விக்கி, கஜன்!



## சீறிப்பாய்கின்றார் மஹிந்தர்

**கொழும்பு, ஓக.25**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கும் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனுக்கும் நாடாளுமன்றத்தில் இருவர் ஓய்வுகொடுத்துள்ளார்கள். அவர்கள்தான் விக்னேஸ்வரனும், கஜேந்திரகுமாரும். இவர்கள் இருவரும் தமிழ் - சிங்கள மக்களின் உறவைப் பாதிக்கும் கடும் இனவாதக் கருத்துக்களால் சபையை அலங்கரிப்பதற்கு முற்படுகின்றார்கள்.**

– இவ்வாறு ஆளும்கட்சியின் கூட்டத்தில் சீற்றத்துடன் தெரிவித்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாடாளுமன்ற விதிமுறைகளை மீறி தமிழ் அரசியல்வாதிகள் கடந்த காலங்களிலும் செயற்பட்டார்கள்; தற்போதும் செயற்படுகின்றார்கள். அவர்களைத் திருத்தவே முடியாது.

நல்லாட்சி அரசின் காலத்தில் சம்பந்தனும் சுமந்திரனும் இணைந்து சபையில் கலாட்டா பண்ணினார்கள். தற்போது அவர்கள் இருவருக்கும் சபையில் ஓய்வுகொடுத்துவிட்டு அவர்கள் பாணியில் விக்னேஸ்வரனும் கஜேந்திரகுமாரும் செயற்படத் தொடங்கிவிட்டார்கள். சுயநிர்ணய உரிமை விடயத்தையும் போர்க்குற்ற விசாரணை விவகாரத்தையும் முன்னிலைப்படுத்தி இவர்கள் உரையாற்றுகின்றார்கள். சர்வதேசப் பொறிமுறைக்குள் எம்மைச் சிக்கவைப்பதுதான் இவர்களின் பிரதான நோக்கம். புலம்பெயர் புலிகள் அமைப்புகளின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் இவர்கள் செயற்படுகின்றார்கள். இதற்கு விரைவில் முடிவு காணப்படும்.

எனவே, சபையில் எமது அணி உறுப்பினர்கள் அனைவரும் சபை விதிமுறைகளைப் பின்பற்றி அமைதியாக இருக்க வேண்டும். கட்சியின் நற்பெயரைக் காப்பாற்ற வேண்டும். அனைவருக்கும் சபையில் உரையாற்ற படிப்படியாகச் சந்தர்ப்பம் வழங்கப்படும் – என்றார்.





## அமிர் பிறந்ததின நிகழ்வு நாளை பண்ணாகத்தில்



பண்ணாகத்தில் பிறந்த தமிழ்ப் பெருந்தலைவரான அ.அமிர்தலிங்கத்தின் 93ஆவது பிறந்த தின நிகழ்வை பண்ணாகம் அண்ணாகலை மன்றமும் பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து ஏற்பாடுசெய்துள்ளன.

இலங்கை நாடாளுமன்றத்தின் முதலாவது தமிழ் எதிர்க்கட்சித் தலைவரான தளபதி அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 93ஆவது பிறந்த தினமாகிய நாளை 26ஆம் திகதி புதன் கிழமை காலை 7.00 மணிக்கு வலிமேற்கு பிரதேசசபை முன்றிலில் அமைந்திருக்கும் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்வு இடம்பெறும்.

அன்று மாலை 4.00 மணியளவில் பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் விழாக்குழுத் தலைவர் அ.கிருஷ்ணமூர்த்தியின் தலைமையில் விழா நடைபெறும். வரவேற்புரையை ஸ்ரீகந்தமூர்த்தியும், நினைவுப் பேருரையை இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜாவும், நினைவுரையை முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் தங்க. முகுந்தனும், 'இன நன்மை கருதிய அரசியல் தலைமைத்துவத்தைக் கட்டி எழுப்புவோம்!' என்ற கருத்துரையை யாழ். பல்கலைக்கழகக் கல்வியியற்றுறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வராவும் நிகழ்த்துவார்கள். நன்றியுரையை ப. அஜித்குமார் வழங்குவார்.

## ஹல்துமுள்ளை நகரில் வீட்டுக்குள் புகுந்த பஸ்

கொழும்பு, ஓக.25

கொழும்பிலிருந்து பதுளையை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸொன்று வீடொன்றின் மீது மோதி விபத்துக்குள்ளாகியதில், பயணிகள் ஐவர் கடுங் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.



இவ் விபத்து, நேற்று காலை, ஹல்துமுள்ளை நகரில் இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் கடுங்காயங்களுக்குள்ளானவர்களில் நான்கு பேர் தியத்தலாவை அரசினர் மருத்துவமனையிலும், மற்றவர் ஹல்துமுள்ளை அரசினர் மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுசிகிச்சை பெற்று வருகின்றனர்.

காயமுற்ற ஐவரும், விபத்துக்குள்ளான பஸ்ஸில் பயணித்தவர்களாவர். பஸ் மோதிய வீட்டில் அச்சமயம் எவரும் இல்லாதலால், எவருக்கும் காயம் ஏற்படாதபோதிலும், அந்த வீட்டிற்கு பலத்தசேதங்கள் ஏற்பட்டுள்ளன.

பஸ்ஸின் வேகம் கட்டுப்படுத்தப்படாதலாலேயே, இவ் விபத்து இடம்பெற்றதாக, விசாரணைகளை மேற்கொண்டபொலிஸார் தெரிவித்தனர்.

## இராணுவ வாகனம் மோதி குடும்பப் பெண் படுகாயம்!

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி ஏ–9 வீதியின் மத்திய கல்லூரிக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பப் பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

செல்வா வீதி, ஆனந்தபுரத்தைச் சேர்ந்த விக்னேஸ்வரன் தசாயினி (வயது – 35) என்ற பெண்ணே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

பாடசாலையில் கல்வி கற்று வரும் தனது பிள்ளைகளை ஏற்றி வரச் சென்ற வேளையே இந்த விபத்தில் அவர் சிக்கியுள்ளார்.

டிப்போ சந்தியில் இருந்து மத்திய கல்லூரி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது பின்னால் அதே திசையில் வந்த இராணுவ வாகனம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## அம்பாறைப் பகுதியில் வெடிபொருள்கள் மீட்பு!

அம்பாறை மாவட்டத்தின் இருவேறு பகுதிகளில் இருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக இருந்த கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் வெடிபொருள் காணப்படுகின்றன என நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பொதுமக்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, அந்தப்பகுதியில் விமானப்படையினரால் யுத்த காலங்களில் உபயோகிக்கப்பட்ட வெடிபொருள் ஒன்றின் பகுதி மீட்கப்பட்டுள்ளது.

அந்த வெடிபொருளை ஆராய்ந்து உரிய அனுமதியைப் பெற்று செயழிலக்கச் செய்ய பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதேவேளை, திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாவட்டாய் என்னும் பிரதேசத்தில் கடந்த ஓகஸ்ட் 20ஆம் திகதி காணியொன்றில் புதையுண்டிருந்த ரி – 81 மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டு விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் செயலிழக்கச் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.08.2020 இல் வெளியிடப்பெற்றது.